Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி–28 | 10–06–2004 | வியாழக்கிழமை | ஓசை –113




# பயங்கரவாதக் கலாசாரத்தை ஆளும் கட்சி

# பாராளுமன்றத்தில் நடத்திக்காட்டுகின்றது!

## சனாதிபதி-சபாநாயகருக்கு அனைத்து எதிர்க்கட்சி பா.உ.கள் கடிதம்

(கொழும்பு)

**சிறிலங்காவின் புதிய பாராளுமன்றம் இதுவரை நான்கு முறை கூடியபோதும் ஆளும் கட்சி காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதக் கலாசாரத்தை நடத்திக் காட்டியிருக்கிறது. அத்துடன் அமைச்சரவையைச் சேர்ந்த சிலர்கூட பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் நடந்து கொண்டுள்ளனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து சபாநாயகருக்கும், சனாதிபதிக்கும் அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.**

நேற்று பாராளுமன்ற கட்டடத்தில் கூடிய அவர்கள் இக்கடிதத்தில் கையொப்பமிடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றம் இதுவரை நான்கு அமர்வுகள் கூடியுள்ளது. இந்த நான்கு முறையும் ஆளும் கட்சியினர் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத கலாசாரத்தை நடத்திக் காட்டியுள்ளது. கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற சபாநாயகர் தெரிவின்போது வாக்குப் பெட்டிகளின் மீது ஏறியிருந்தும் எழுத்துத்தாள்களினை எடுத்தெறிந்தும்பாராளுமன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்தினர். அதேசமயம் சிறிய கட்சிகளின் குரலுக்கு மதிப்பளிக்க ஆளும் கட்சியினர் மறுக்கின்றனர். உதாரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## நடேசன், தம்பையா கொலையை கண்டித்து பூரண கதவடைப்பால் திருமலை வெறிச்சோடியது

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தின் தமிழ் மக்கள் பேரவையின் அழைப்பில் பூரணகதவடைப்பு நேற்று நடத்தப்பட்டது. ஊடகவியலாளர் நடேசன், பேராசிரியர் தம்பையா ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்து இப்பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ், முஸ்லிம், சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் திருமலை நகரில் இயங்கவில்லை. வங்கிகள் மற்றும் தமிழ்,முஸ்லிம், சிங்கள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. மாகாணசபை திணைக்களகங் களுக்கு ஊழியர்கள் செல்லவில்லை. அரச அலு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல்

(கொழும்பு)

தினக்குரல் பத்திரிகை ஊடகவியலாளர் மோகனது கொழும்பு கதிரேசன் வீதியில் உள்ள வீடு நேற்று தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. நேற்று அந்தச் செய்தி இதழில் வெளியான கட்டுரை ஒன்று தொடர்பிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்ட ஊடகவியலாளர் சிறிலங்கா காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இந்த சம்பவம் சிறிலங்கா பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கும்கொண்டு வரப்பட்டுள்ளது.

## தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று சனாதிபதி சந்திரிகாவுடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று விடுத்த அழைப்பையடுத்து இச்சந்திப்பு நடைபெறவுள்ளதாக தமிழ்க் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இரவு எட்டு மணிக்கு சனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குளம் பிரதேசப் பொறுப்பாளர் மீது சிறிலங்காப் பொலிசார் தாக்குதல்

வவுனியா புதுக்குளம் பிரதேசப் பொறுப்பாளர் அழகரசன் நேற்று சிறிலங்காப் பொலிசாரால் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும், தெரிய வருகையில், இவர் வவுனியாவிலிருந்து புதுக்குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றவேளை இரண்டு சிறிலங்காப் பொலிசார் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்து அவர்களுடைய மோட்டார் சைக்கிளால் பாதையின் குறுக்கே தடுத்து தாக்குதல் நடத்தினர். இதனைக் கண்ட ஒருவர் அரசியல்துறைக்குத் தொலைபேசி மூலம் நடந்த சம்பவத்தைத் தெரிவித்துள்ளார். உடனடியாக அவ்விடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் மற்றும் நகரப் பொறுப்பாளர் தர்மேந்திரா விசாரணை நடத்தினர். இதனைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சென்று இரு தரப்பினரையும் சந்தித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சந்திப்பு ரத்து

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு ஆளுநருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று மேற்கொள்ளவிருந்த சந்திப்பைக் கைவிட்டுள்ளனர்.

நேற்றுப் பாராளுமன்றக் கட்டடத்தில் கூடி இது குறித்து முடிவெடுத்த கூட்டமைப்பினர் இவ்வாறு அறிவித்துள்ளனர். இன்றைய தென்னிலங்கை அரசியல் சூழ்நிலையையும், நாட்டின் நிலைமையையும் கருத்தில் கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கனகம்புளியடிச் சந்தியில் புதிய பொலிஸ் நிலையம் திறப்பு

(தென்மராட்சி)

யாழ் தென்மராட்சி கனகம்புளியடிச் சந்திப் பகுதியில் சிறிலங்கா பொலிசார் புதிய பொலிஸ் நிலையம் ஒன்றை நேற்று திறந்திருக்கின்றனர்.

யாழ் தென்மராட்சிப் பகுதியில் சிறிலங்காப் பொலிசார் இவ்வாறு புதிய பொலிஸ் நிலையம் ஒன்றை அமைத்திருப்பது யுத்த நிறுத்த மீறலாகும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிகளுக்கு முற்றிலுமாறாக சிறிலங்கா பொலிசார் இப்புதிய பொலிஸ் நிலையத்தை அமைத்திருப்பதனால் அப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

## விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசாங்கம் நீக்கவேண்டும்

### விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசாங்கம் உடனடியாக நீக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் செயலர் திருமாவளவன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். நேற்று தமிழ்நாடு திருநெல்வேலி நகரில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைத்த அவர் இலங்கையில் தமிழர்களின் விடுதலைக்காக தசாப்த காலமாகப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பது அவசியமற்றது. இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயம் முக்கியகட்டத்தை அடைந்துள்ளமையால் இந்திய அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். இலங்கையில் சிறுபான்மை இன மக்களுக்களின் அபிலாசைகளுக்கு ஆதரவளிப்பது என்று புதிய மத்திய அரசாங்கத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை நடக்கவிருந்த கண்டனப் பேரணி வியாழக்கிழமைக்கு ஒத்திவைப்பு

(வடமராட்சி)

யாழ் வடமராட்சி நகரில் நாளை முன்னெடுக்கப்படவிருந்த கண்டனப் பேரணி அடுத்த வாரம் 17 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாண பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பொது அமைப்புகளது பிரதிநிதிகளுடனான சந்திப்பில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்டனப் பேரணியினை முழு அளவிலான வகையில் கூடிய மக்கள் பங்களிப்புடன் விரிவாக்கும் வகையில் எதிர்வரும் வியாழக்கிழமை கண்டனப் பேரணியை நடாத்த தீர்மான...

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா விமானப்படை மிக் விமானம் நீர் கொழும்பு வாவியினுள் வீழ்ந்தது

### மூன்று துண்டுகளாக உடைந்த விமானத்தை மீட்க முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான மிக்-27 ரக விமானம் நேற்றுக்காலை நீர்கொழும்பு வாவியினுள் வீழ்ந்துள்ளது மூன்று துண்டுகளாக உடைந்த இவ்விமானத்தை மீட்கும் முயற்சி இடம்பெற்று வருகிறது.

நேற்றுக்காலை 8.45 இற்கு கட்டுநாயக்கவிலிருந்து பயிற்சி பயணத்தை ஆரம்பித்த மிக் 27 ரக விமானம் திடீரென்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விமானத்தில் விமானி மட்டுமே இருந்தார். அவர் பரசூட் மூலம் குதித்து உயிர் தப்பியுள்ளார்.

விமானத்தில் கோளாறு ஏற்பட்டிருப்பதை உணர்ந்து கொண்ட விமானி விமானத்தை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு மீளவும் கொண்டு வருவதற்கு முயற்சி செய்த போதும் அது முடியாத நிலையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனையாகிறது

க. பொ. த. O/L சாதாரண தர வகுப்புக்கான சகல பாடங்களுக்குமான மாதிரி வினா விடைகளை (அஸ்ரேன் பதிப்பு) குயிலன் புத்தகசாலை கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-9826)

### தவறிவிட்டது

இல: 60/1 விசுவமடு எனும் முகவரியைக் கொண்ட மகாலிங்கம வர்ணபாலி ஆகிய எனது அடையாள அட்டை இல:- 818511809v விசுவமடுப் பகுதியில் 08.06.2004 அன்று செவ்வாய்க்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது விசுவமடு காவல பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4098)

# காந்தி நிலையம், பாரத் இல்லத்திற்கு 'யுனிசெப்' மின்பிறப்பாக்கிகள் அன்பளிப்பு



(அலுவலக செய்தியாளர்)

உருத்திரபுரம் காந்தி நிலையம் மற்றும் வள்ளிபுனம் பாரதி சிறுவர் இல்லத்திற்கென யுனிசெப் நிறுவனத்தினர் இரண்டு மின்பிறப்பாக்கிகளை அன்பளிப்புச் செய்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக தலைமைச் செயலகத்தில் நேற்று பகல் 10 மணிக்கு யுனிசெப் பிரதிநிதி பெனிபருவ் சிறுவர் இல்லங்களின் புனர்வாழ்வுக்கும் அபிவிருத்திக்குமான நிர்வாகப் பொறுப்பாளர் ராஜாரவியிடம் மேற்படி இரு மின்பிறப்பாக்கிகளையும் கையளித்தார்.

இவ்வைபவத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் யுனிசெப் நிறுவனப் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சோ.கு)

# மாவீரர் ரமேஸ் ஞாபகார்த்தமாக கணினிப் பயிற்சிக் கலைக்கூடம் திறப்பு

(முல்லைத்தீவு)

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் மாவீரர் ரமேஸ்/சுகு ஞாபகார்த்த கணினிப்பயிற்சிக் கலைக்கூடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

1986ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்த மாவீரர் ரமேஸ்/சுகுவின் நினைவாக அவரது பெற்றோர் உடன்பிறந்தோரின் நிதியில் உருவான கணினிப் பயிற்சிக் கலைக்கூடத் திறப்புவிழா முற்பகல் 10.00மணிக்கு கல்லூரி அதிபர் கே.பி.கணேஷ் தலைமையில் ஆரம்பமானது.

தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் ஏற்றிவைத்தார். மாவீரர் ஞாபகார்த்தக் கல்வெட்டினை ஓய்வு பெற்ற அதிபர் சிவக்கொழுந்து திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து கணினிப் பயிற்சிக்கலைக்கூடக் கட்டடத் தொகுதியினை வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங்கன் நாடாவை வெட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதனையடுத்து மண்டபத்தில் அலங்கரித்துவைக்கப்பட்டிருந்த மாவீரர் ரமேஸின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை அவரது சகோதரரான கு.ரதன் ஏற்றிவைக்க, மலர்மாலையினை அவரது தாயாரான கு.இராசம்மா அணிவித்தார்.

தொடர்ந்து கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவீரர் ரமேஸின் சகோதரரான ரகுவினால் கல்லூரி அதிபர் கே.பி. கணேசிடம் திறப்பு கையளிக்கப்பட்டது. இதனையடுத்து மாவீரரின் தந்தையார் குமாரையா, தாயார் இராசம்மா ஆகியோருக்கு புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன், முல்லை. வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சந்திரபாலன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் கருத்துக்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம், ஓய்வு பெற்ற விஞ்ஞான பிரதிக்கல்விப் பணிப்பாளர் பாலசிங்கம், ஓய்வு பெற்ற அதிபர் ஏ.கே மகாலிங்கம், கல்லூரி அபிவிருத்திக்குழு உறுப்பினர் பொன்னம்பலம், கல்லூரியின் முன்னாள் அதிபர் சு.திருஞானம், வன்னித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன், கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, வலயக்கல்விப் பணிப்பாளர் குருகுலராசா ஆகியோர் நிகழ்த்தினர். இதனையடுத்து மாவீரர் ரமேஸ் நினைவாக 'கல்லறை முப்பத்தி ஆறு' எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலினை ஓய்வு பெற்ற அதிபர் ஏ.கே மகாலிங்கம் வெளியிட்டு வைக்க, முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி ஞா.தர்மேந்திரா பெற்றுக் கொண்டார்.

மேற்படி நிகழ்வில் கல்விமான்கள், ஆசான்கள், விடுதலைப் புலிகளின் போராளிகள், பொது மக்கள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், கல்லூரி அதிபர் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

## உப மருந்தாளர் பயிற்சி வகுப்பு

தமிழீழ சுகாதார சேவையினரால்நடாத்தப்படும் உப மருந்தாளர் பயிற்சி வகுப்பு வழமைபோல் சனிக்கிழமைகளில் நடைபெறும். 12.06.2004 அன்று அனைத்து மாணவர்களும் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகத்திற்கு வருகை தரவும்.

தமிழீழ சுகாதார சேவைகள்
S.புவனேந்திரன் (4588)

# முல்லைத்தீவுக் கடலில் சுருட்கம்பி குற்றி 6பேர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலுள்ள சுற்றுலாப் பயணிகள் ஓய்வெடுக்கும் கடற்கரையில், கடலில் இராணுவம் பாது காப்புக்காக போட்டிருந்த சுருட் கம்பி குற்றியதில் ஆறுபேர் காயமடைந்தனர்.

கரையிலிருந்து 50யார் தூரத்தில் இக்கம்பி போடப்பட்டிருந்தது. இவர்கள் கடலில் இறங்கிச் சென்று கொண்டிருந்த போது காயமடைந்துள்ளனர். (20)

## சாவு அறிவித்தல்



### மருதலிங்கம்–சகுந்தலாதேவி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.170 பாண்டியன் குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.1098 திருநகர், கிளிநொச்சியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மருதலிங்கம்- சகுந்தலா தேவி நேற்று 09/06/2004அன்று காலமானார். இவர் காலம் சென்ற கதிரவேலு காமாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலம் சென்ற மருதலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சதாபரன், ரேணுகோபன் (ஆசிரியர் பாண்டியன் குளம் ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவமணிதேவி (நெடுந்தீவு), கோகிலாதேவி(கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்), கோமதி தேவி(கண்ணகிபுரம்), புனிதவதி (ஸ்கந்தபுரம்), நிர்மலராசா(கனடா), உருத்திரராசா (விவசாய ஆராட்சி நிலையம் கிளிநொச்சி), தர்மசோதிராசா (நோர்வே) ஆகியோரின்அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 4.00மணிக்கு அன்னாரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பு.தவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இல.1098,
கிருஸ்ணன்கோயில்வீதி,
திருநகர், கிளிநொச்சி. (சி.9827)

தகவல்
ம.ரேணுகோபன்
(கண்ணன்)

## பொங்கல் விழா

புதுக்குடியிருப்பு கோம்பாவில் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா 14.06.2004 திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

(4097) ஆலய பரிபாலனசபை

## பகிரங்க ஏல விற்பனை 16.06.2004

வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் முதல் தரமான உழுந்து 5300 கிலோ 16.06.2004ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்குத் தலைமைப் பணிமனையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. உழுந்தினைப் பார்வையிட விரும்புபவர்கள் காரியாலய நேரத்தில் சமுகமளித்துப் பார்வையிடலாம்.

ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புவோர் 16.06.2004ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக மீளளிக்கப்படும் வைப்பாக ரூபா ஆயிரமும், மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 200.00 உம் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றிருத்தல் வேண்டும். அதி கூடிய கேள்விகாரர் பெறுமதியின் அரைவாசியை உடன் செலுத்துவதுடன் மீதியை அடுத்துவரும் மூன்று தினங்களுக்குள் செலுத்தி உழுந்தினைப் பொறுப்பெடுத்தல் வேண்டும்.

வ. வ. ப. நோ. கூ. சங்கம்,
நெடுங்கேணி.

வி. குகராசா
தலைவர். (சி-9126)

## சிறப்புப் பேருந்துப்பணி

13. 06. 2004 ஆம் நாள் நடைபெறும் அளம்பில் புனித அந்தோனியார் திருநாளினை முன்னிட்டு 12. 06. 2004, 13. 06. 2004 ஆகிய இருநாட்களும் பேருந்துப்பணி கீழுள்ளவாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**12.06.2004, சனி**

1. வலயர்மடத்திலிருந்து மாலை 03. 00 மணிக்குத் தொடங்கி மாத்தளன், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, வற்றாப்பளை, முள்ளியவளை, குமுழமுனை ஊடாக அளம்பில் சென்றடையும்.
2. இரணைப்பாலையிலிருந்து மாலை 04. 00 மணிக்கு தொடங்கி புதுக்குடியிருப்பு, மந்துவில், முல்லைத்தீவு ஊடாக அளம்பில் சென்றடையும்.
3. நாயாற்றிலிருந்து மாலை 06. 00 மணிக்குத் தொடங்கி செம்மலை ஊடாக அளம்பில் சென்றடையும்.
4. முல்லைத்தீவிலிருந்து மாலை 05. 30 மணிக்குத் தொடங்கி அளம்பில் சென்றடையும்.

**13.06.2004, ஞாயிறு**

1. புதுக்குடியிருப்பிலிருந்து காலை 06. 00 மணிக்குத் தொடங்கி மந்துவில், முல்லைத்தீவு ஊடாக அளம்பில் சென்றடையும்.
2. முல்லைத்தீவிலிருந்து காலை 04. 30, 06. 00, 06. 30 மணிக்குத் தொடங்கி அளம்பில் சென்றடையும்.
3. நாயாற்றிலிருந்து காலை 06. 30 மணிக்குத் தொடங்கி அளம்பில் சென்றடையும்.
4. முள்ளியவளையிலிருந்து காலை 06. 00 மணிக்குத் தொடங்கி குமுழமுனை ஊடாக அளம்பில் சென்றடையும்.

தமிழீழப்போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு. (4585)

# ஈராக்குறித்து அமெ., பிரி.கொண்டுவந்த தீர்மானம் ஐ.நாடுகள் சபையில் அங்கீகாரம்

(வோஷிங்டன்)

**ஐக்கிய நாடுகள் சபையில், ஈராக் தொடர்பாக அமெரிக்காவும், பிரிட்டனும் கொண்டு வந்த தீர்மானம் நேற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தின்படி ஈராக்கின் ஆட்சிப்பொறுப்பு இம்மாதம் 30ஆம் திகத் ஈராக்கிய மக்களிடமே ஒப்படைக்கப்படவுள்ளது என்றும், ஈராக்கிலுள்ள கூட்டணிப் படைகளுக்கு அமெரிக்காவே தலைமை தாங்கும் என்றும், இந்தப் படை 2006வரை அங்கிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேலும் எண்ணெய் வளத்தின் மீது அமெரிக்கா கட்டுப்பாடுகளை கொண்டிருக்குமென்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

ஈராக்கியர்களே அவர்களது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்க வாய்ப்பேற்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கின்றது என்று ஐ.நா.சபை செயலர் கொபி அனான் கூறியுள்ளார்.

நான்கு முறை மாற்றம் செய்யப்பட்ட பின்னர் இந்த தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அடிப்படை அம்சங்கள் எதுவும் மாற்றம் செய்யப்படவில்லை எனும் கருத்தும் நிலவுகின்றது.

ஈராக்கில் 2006இல் சனவரியில் சனநாயக முறையில் அரசு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மேற்கொள்ள வேண்டிய பல்வேறு நடைமுறைகள் இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இடைக்கால அரசு எண்ணெயிலிருந்து கிடைக்கின்ற வருவாய் உள்ளிட்ட அனைத்து வளங்களையும் அமெரிக்கா தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும். தேவையான செலவுகளை மட்டுமே செய்து கொள்ளமுடியும் என்று தீர்மானத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதும் சில காலங்கள் இந்தத் தீர்மானத்தை சர்வதேச சமூகம் கண்காணிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் இடைக்கால அரசு தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் இத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

ஈராக்கில் சதாம் ஆட்சியை அகற்றிய பின்னர் அமெரிக்கக் கூட்டணிப்படைகள் ஆதிக்கம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈராக் சம்பந்தமான தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளமையானது ஈராக் மக்களுக்கு கிடைத்த வெற்றி.

இவ்வாறு நேற்று ஜோர்ஜியாவில் ஆரம்பாமாகியுள்ள ஜி-8 நாடுகளின் உச்சி மாநாட்டில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது ஈராக்கில் மாற்றம் ஏற்படுவதையே காட்டுகின்றது. அங்கு அமைதி ஏற்படும் என்று பிரிடிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் ஜி-8 மாநாட்டில் நேற்று கூறியுள்ளார்.



மத்திய பாக்தாத்தில் சியா மதத்தலைவர்-அலிஅல்சிஸ் டானியின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஊர்வலம்.



இந்தோனேஷிய தலைநகர் யாவாவின் தெற்கில் உள்ள ப்ரோமோ எரிமலையில் ஏற்பட்டுள்ள புகை மண்டலம்.

## ஈராக்கின் கடன்கள் அனைத்தையும் பதிவழிக்க அமெரிக்கா யோசனை

(வோஷிங்டன்)

ஈராக்கின் கடன்கள் அனைத்தும் பதிவழிக்கப்பட வேண்டுமென அமெரிக்கா யோசனை தெரிவித்துள்ளது.

மொத்தம் 12 ஆயிரம் கோடி டொலர்கள் வரையிலான கடன்களை ஈராக் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது. இந்த விடயம் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள சுற்று நிருபம் ஒன்றில் சம்பந்தப்பட்ட கடன்களை வழங்கிய நாடுகள் அவற்றிற்கான தொகையில் 80 சதவீதத்தையாவது பதிவழிக்க வேண்டு மென்று தெரிவித்துள்ளது. இதற்கிடையில் கடன் பெற்ற நாடுகள் அவற்றிகான கடன்களை குறைக்கும்படியும் திருப்பிச் செலுத்த வேண்டிய கால எல்லையை அதிகரிக்கு மாறும் விடுக்கப்படும் கோரிக்கைகளை ஆராயும் பரிஸ் கழகம் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் கிளை அமைப்பு இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்துள்ளது. அத்துடன் ஈராக்கின் கடன் சம்பந்தமான விரிவான அறிக்கையும் பரிஸ் கழகத்திடம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிய நிர்வாகம் ஈராக்கிய மக்களிடம் ஒப்படைக்கப்பட்டதும் எண்ணெய் உற்பத்தி மூலம் 2000 கோடி டொலர்களை ஈராக் பெற்றுக் கொள்ள முடியும். எனினும் இந்த வருமானத்தைக் கொண்டு கடன் தொகையைத் தீர்ப்பது என்பது இயலாத விடயம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு கனடா ஆதரவு தெரிவித்துள்ள போதிலும் பெருமளவு கடன் தொகையை கொண்டுள்ள ரஷ்யாவும் பிரான்சும் 80 சதவீத கடன் தொகையை குறைக்க முடியாது என்று தெரிவித்துள்ளன.

## சனாதிபதியின் பதவிக்காலம் குறித்து வெனிசுலாவில் அபிப்பிராய வாக்கெடுப்பு

(லண்டன்)

வெனிசுவெலாவில் மீண்டும் சனாதிபதித் தேர்தலை நடத்துவதா என்பது பற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேசிய தேர்தல் சபை விடுத்துள்ள அறிவித்தலில் தற்போதைய சனாதிபதி சாவேஸிற்கு எதிராக கருத்துக் கணிப்பில் மக்கள் வாக்களிப்பார்களானால் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதியளவில் சனாதிபதித் தேர்தல் மீண்டும் நடைபெறும் எனத்தெரிவித்துள்ளது.

சனாதிபதிக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்த்தரப்பினர் கடந்த ஒருவருட காலமாக மேற்கொண்டு வந்திருந்தனர்.

சாவேசின் எதிராளிகளுக்குக் கிடைத்த வெற்றியாக இந்தக் கருத்துக் கணிப்பு கருதப்பட வேண்டுமென அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வெனிசுவெலாவில் அரசியல் யாப்பின் அடிப்படையில் கருத்துக் கணிப்பில் சாவேஸ் தோல்வி அடைந்தால் புதிய சனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை உபசனாதிபதி நிர்வாகத்தை ஏற்றுக்கொள்வது அவசியமாகுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில்இடிந்து வீழ்ந்த 5 மா... ...டம் ஒன்றின் இடிபாடுகளை அப்புறப்படுத்தும் இராணுவம்.

## 5 ஆண்டுகளில் சர்வதேச அமைதிகாக்கும் படை 50 ஆயிரம் துருப்பினருடன் உருவாக்கப்படும்

### -ஜி-8 நாடுகளின் கூட்டமைப்பு தெரிவிப்பு

(லண்டன்)

சர்வதேச அமைதி காக்கும் படை ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக ஜி.8 நாடுகளின் கூட்டணி தெரிவித்துள்ளது. ஐம்பதாயிரம் துருப்பினர்களைக் கொண்டதாக உருவாக்கப்படும் இக்கூட்டணி அடுத்த ஐந்து, ஆறு ஆண்டுகளில் உருவாக்கப்பட்டுவிடும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சகலவிதமான மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கும் சர்வதேச அமைதி தேவை என்பதால்தான் இந்த அமைதிகாக்கும் படையின் அவசியம் உணரப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜி.8 நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளும் தலைவர்கள் மத்தியிலே ஈராக்கிற்கான சனாதிபதியை ஜோர்ஜ் டபிள்யூ புஸ் அறிமுகப்படுத்தவுள்ளார்.

ஈராக்கின் புதிய ஜனாதிபதியாக களி அல்யுவாட் தெரிவு செய்யப்பட்டு தனது முதலாவது சர்வதேசப் பிரசன்னத்தை அமெரிக்க சனாதிபதியுடன் சேர்ந்து மேற்கொள்ளவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தோனேசியாவில் எரிமலை அபாயம்

இந்தோனேசியா செங்கேதீவில் இருக்கும் ஆவு எரிமலை வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது எரிமலையில் இருந்து தீக்குழம்பு வெளியேறிய வண்ணம் உள்ளபடியால் அருகில் வசிக்கும் 22000 மக்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளனர்.1812 ஆம் ஆண்டு எரிமலை வெடித்ததால் 3000 மக்கள் பலியாகி உள்ளனர். மீண்டும் அந்த எரிமலை 1996 ஆம் ஆண்டு வெடித்ததில் 40 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

## சீனாவில் மக்கள் பார்வைக்கு புத்தரின் காலடிச் சுவடு

பெய்ஜிங்,ஜூன் 7இல் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட யுவாங் சுவாங் செதுக்கிய புத்தரின் காலடிச் சுவடு முதல் முறையாக பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. சீனாவின் சான்சி மாகாணத்தின் டாங்சுவான் நகரில் இது வைக்கப்பட்டுள்ளது.

35 செ.மீ. நீளம்,25 செ.மீ. அகலம்,10 செ.மீ. உயரம் கொண்ட இந்த சிற்பத்தில் 24 சீன எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன. 1400 ஆண்டுகளுக்கு முன்பு செதுக்கப்பட்டதாகக் கருதப்படும் இக் கற்சிற்பத்தில் யுவாங் சுவாங் கின் கையெழுத்தும் இடம்பெற் றுள்ளது.

இதனிடையில் சான்சி மாகாணத்தில் ஜியான் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்த புத்தரின் கைவிரல் எலும்பை 800 புத்தத் துறவிகள் உள்ளிட்டோர் வரவேற்றனர். ஹாங்காங்கில் பத்து நாள் காட்சிக்குப் பிறகு, புத்தரின் கைவிரல் எலும்பு,சிறப்பு விமானம் மூலம் சீனாவுக்குக் கொண்டு வரப்பட்டது. சிறப்பு பூஜைகளுக்குப் பிறகு அங்குள்ள கோயிலில் பொதுமக்கள் பார்வைக்காக இந்த புனிதப் பொருள் வைக்கப்பட்டிருந்தது. 7 அடுக்குகள் கொண்ட, தங்க நகைகள், மதிப்புமிக்க கற்கள் கொண்ட பெட்டியில் வைக்கப்பட்டிருந்த புத்தரின் விரல் எலும்பை ஹாங்காங்கில் 10 இலட்சம் பேர் பார்வையிட்டனர்.

## இனந்தெரியாதோரால் சவுதியில் அமெரிக்கர் சுட்டுக் கொலை

(றியாத்)

சவுதி அரேபியாவில் அமெரிக்கர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்ட அமெரிக்கர் றியாத் நகரிலுள்ள எண்ணெய் நிறுவனத்தில் பணியாற்றி வந்தவராவார் அவரது கொலையையடுத்து சவுதியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தீவிரவாத ஒழிப்பிற்கு சவுதியும் ஆதரவு தெரிவித்துள்ளது. இதனையடுத்து அல்-ஹைதா தீவிரவாதிகள் அடிக்கடி சவுதியில் தாக்குதல்களை அதிகரித்திருந்தனர்.

இதனால் நேற்று முன்தினம் அமெரிக்கர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு அல்-ஹைதாவே காரணமாக இருக்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

அமெரிக்கர்களுக்கு எதிராக சவுதியில் நடைபெறும் ஐந்தாவது தாக்குதல் இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் சவுதியில் பணிபுரியும் வெளிநாட்டவர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

# யாழ்.இல் வலுவிழந்தோருக்கான புனர்வாழ்வுத் திட்டம் விரைவில் அமுல்

## யு.என்.எச்.சி.ஆர் மற்றும் த.பு.கழகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாட்டில் வாழ்ந்துவரும் வலுவிழந்தோர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் திட்டம் ஒன்றை யு.என்.எச்.சி.ஆர். மற்றும் தமிழர்புனர்வாழ்வுக்கழகம் அமுல்ப்படுத்தவுள்ளது.**

கடந்தகால யுத்த அனர்த்தங்கள், மற்றும் ஏனைய சம்பவங்களிலும் அங்கவீனர்களாகவும், வலுக்குறைந்தவர்களாகவும் வாழ்ந்து வருவோரை மையமாகக் கொண்டே இப்புனர்வாழ்வுத் திட்டங்களை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் (U.N.H.C.R) மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பன இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளன.

அந்தவகையில் இப் புனர்வாழ்வுத் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக யாழ் மாவட்டத்தில் உள்ள வலுவிழந்தோர்களின் விபரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான விபரம் திரட்டும் நடவடிக்கைகள் யாழ்மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாகவும் இடம்பெற்று வருகின்றன. (33)

# கைதடி,நாவற்குழி பாலங்களை புனரமைக்கக் கோரிக்கை

## யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சங்கம் விடுத்தது

(யாழ்ப்பாணம்)

சேதமடைந்த நிலையில காணப்படும் கைதடி மற்றும் நாவற்குழிப்பாலங்களைப்புனரமைப்புச் செய்யுமாறு யாழ் மாவட்ட அபிவிருத்திச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களின் காரணமாக தகர்க்கப்பட்டு தற்பொழுது தற்காலிகமாக புனரமைக்கப்பட்ட நிலையில் மேற்படி இருபாலங்களும் காணப்படுகின்றன.

நாளாந்தம் பல்லாயிரக்காணக்கான பொதுமக்களும் வாகனங்களும் போக்கு வரத்துச் செய்யும் கண்டிவீதியில் அமைந்துள்ள இவ்விரு பாலங்களும் சிறந்த முறையில் புனரமைக்கப்படாததால் இப்பாலமூடான பயணம் அபாயம் நிறைந்ததாகவே காணப்படுகிறது.

எனவே இதனை சிறந்த முறையில் புனரமைப்பதுடன் மேற்படி பாலங்களின் அகலத்தையும் அதிகரிப்புச் செய்து மக்களின் அச்சமற்ற போக்கு வரவிற்கு வழி செய்யுமாறும் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சங்கம்கோரியுள்ளது. (33)

# அக்கராயன்வைத்தியசாலையில் கடந்தமாதம்2951பேர்சிகிச்சை

அக்கராயன் அரசினர் வைத்தியசாலையில் சென்ற மாதம் 2951 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர் இதில் டயரியாவிற்க்கு 19 பேரும் சாதாரணகாய்ச்சல் காரணமாக 334 பேரும் மலேரியாக் காய்ச்சல் காரணமாக 45 பேரும் நாய்க்கடிக்கானசிகிச்சையினை ஒருவரும் விபத்து காயங்களுக்கான சிகிச்சையினை 469பேரும் தொற்று நோய்களிற்கு 92 பேரும் சிகிச்சை பெற்றுள்ளமை தெரியவருகிறது. (15)

# சாட்டிக் கடற்கரையில் இளைஞர்குழு அடாவடி

யாழ். சாட்டிக்கடற்கரையில் இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்கள் அதிகரித்து வருகின்றன.

மேற்படி கடற்கரைக்கு உல்லாசமாக பொழுதுபோக்க வரும் இளைஞர்குழுக்கள் மது அருந்திவிட்டு அடாவடித்தனங்களில் ஈடுபட்டுவருவதுடன் குழு மோதல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் பெண்களுடன் தகாத சேட்டைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் உரிய நடவடிக்கைகளை எடுக்காததே இவ்வாறான அடாவடித்தனங்களின் அதிகரிப்புகளுக்குக் காரணம் என சுட்டிக் காட்டப்பட்டு வருகிறது. (33)

# பணிப்பாளர் சபை உறுப்பினராக தேவதாசன் தெரிவு

தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபை உறுப்பினராகக் கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் க.தேவதாசன் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கடமையைப் பெறுப்பேற்க வரும்படியும் கலாசார அமைச்சிலிருந்து அவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சலன சித்திரம் அமைப்பின் ஸ்தாபகர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை, தேசியத்திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் சகல நிறைவேற்று அதிகாரமுள்ள தமிழ்ப் பிரிவு ஒன்றை உடனடியாக உருவாக்குவது தொடர்பாக கலாசார அமைச்சரால் உரிய உத்தரவாதம் அளிக்கப்பட்டாலன்றிப் பணிப்பாளர் சபை உறுப்பினர் பதவியை க.தேவதாசன் பொறுப்பேற்கக்கூடாது என சலன சித்திரம் அமைப்பின் ஆட்சிக்குழு முடிவு செய்துள்ளது.

# யாழ்.நகரிலிருந்து நாவற்குழிவரை புதியவீதி அமைக்கத் திட்டம் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அடிக்கடி இடம்பெறும் வீதிவிபத்துக்களைத் தவிர்ப்பதற்காக யாழ்.நகரில் இருந்து நாவற்குழிச்சந்திவரை புதியதொரு வீதியை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகிறது.

வீதிவிபத்துக்களைத் தவிர்ப்பதற்காக வளைவுகள் அற்ற நேரான வீதியாக அமைக்கப்படவுள்ள இவ்வீதியை யாழ் நகரில் இருந்து கொழும்புத்துறை அரியாலையூடாக நாவற்குழிவரை அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வீதி அமைப்புக் குறித்த திட்டமிடல்கள் யாவும் தற் பொழுது இடம்பெற்றுவருவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.' (33)



கட்டாக்காலி ஆடுகள் கிளிநொச்சி பிரதான சாலையில் உள்ள கட்டடத்தின் மேல்மாடியில் ஏறிஉலாவரும் காட்சி

(படம் சோதி)

## 25 குடும்பங்கள் தெரிவு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள 25 வீடுகளுக்காக குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன

கடந்த ஆறாம் திகதி அன்று மாலை 4.00 மணியளவில் ஒட்டுசுட்டான் உதவி அரசஅதிபர் திருமதி ந.செல்வராசா தலைமையில் நடைபெற்றது. இதில் ஒட்டுசுட்டான் பிரதேச பொறுப்பாளர் க.ஈழவன் அவர்களும் கலந்து கொண்டார் (5)

## தொலைத்தொடர்பு சேவையை விஸ்தரிக்க

# வடக்குக் கிழக்குப் பிரதேசம் 3வலயங்களாகப் பிரிக்கப்படும்

## ரெலிக்கொம் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு,கிழக்கில் தொலைத் தொடர்பு சேவையை விஸ்தரிக்கும்நோக்கில் மூன்று வலயங்கள் உருவாக்கப்படவுள்ளன. அவை யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு என்பன வடக்கு. வலயம், திருகோணமலை, மன்னார், வவுனியா, என்பன கிழக்கு வலயம். கல்முனை, அம்பாறை என்பன வடக்கு கிழக்கு வலயம் எனவும் பிரிக்கப்பட்டு ,தொலைத்தொடர்பு சேவை விஸ்தரிக்கப்படும் என்று வடக்கு கிழக்கு ரெலிக்கொம் நிறுவன பொதுமுகாமையாளர் கூறியுள்ளார்.

அடுத்தவருடம் சனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் இத்திட்டத்திற்கு ஒவ்வொரு வலயத்திற்கும் ஒவ்வொரு பொறுப்பதிகாரி நியமிக்கப்படுவார். இம் மூன்று வலயங்களை இணைத்து பொதுத் தலைமையகம் திருகோணமலையில் அமைக்கப்படும் என்றும் பொதுமுகாமையாளர் எஸ்.கனகசூரியர் கூறியுள்ளார்.

# வட்டக்கச்சி அரசியல்துறையின் ஒழுங்குபடுத்தலில் சிரமதானம்

வட்டக்கச்சி அரசியல்துறையின் ஒழுங்குபடுத்தலில்பிரதேச ரீதியாக சிரமதானப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

05.06.2004 அன்று சூழல் வாரத்தை முன்னிட்டு கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர், பணிப்பாளர்கள் பிரபா முன்பள்ளி ஆசிரியர்களும், இணைந்து பிரபா முன்பள்ளியில் காலை 8.30 மணிதொடக்கம் சுமார் 12 மணி வரை சிரமதானம் நடைபெற்றது. மற்றும் 10 வீட்டுத்திட்ட மக்களால் விளையாட்டு மைதானத்தில் சிரமதானப்பணி சந்தனம்தலைமையில் 06.05.2004 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கூட்டமும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (12)

# கவனிப்பாரற்று இயங்கும் வத்திராயன் அரிமுன்பள்ளி

(அலுவலகசெய்தியாளர்)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் இயங்கிவரும் ஆரம்பப் பாடசாலையான அரிமுன்பள்ளி மிகவும் மோசமான நிலையில் எவ்வித கவனிப்புமில்லாது இயங்கி வருகிறது.

மிகவும் பதிந்த நிலையில் அள்ளிவீசப்படுவதனாலும் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு இப் பகுதி சிறுவர்களின் அடிப்படை கல்வியை வழங்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த முன்பள்



அமைக்கப்பட்ட. இந்தக்கொட்டகை சுற்றி வரகிடுகுகளினால் அடைக்கப்பட்டு கூரையும் கிடுகினால் வேயப்பட்டிருக்கிறது அவ்வாறு வேயப்பட்ட கிடுகுகளும் சிதைவுற்று காணப்படுகிறன. மணல் நிரப்பப்பட்டுள்ளஇந்தமுன்பள்ளி கொட்டகையினுள் மழைகாலத்தில் மழைநீர் உட்புகுவதாலும் தற்போது எழுந்துள்ள கடற்கரை காற்றினால் மணல் மண் இதனுள்ளியில் 18க்கும் அதிகமான சிறுவர்கள் ஆரம்பக்கல்வியை பயின்று வருகின்றனர். இந்தநிலையில் இவ் முன்பள்ளிக்கான கட்டடம் இல்லாதநிலையிலும் தளபாட வசதிகள் இல்லாதநிலையிலும் தொடர்ந்து கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் முன்பள்ளி ஆசிரியர் தெரிவித்துள்ளார். (லோ,தீ)

# கட்டாக்காலிநாய்களின்தொல்லை வட்டக்கச்சிப்பகுதியில்அதிகரிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தில் பிரதேசசபையின் ஒழுங்குபடுத்தலில் கட்டாக்காலி நாய் ஒழிப்பு நடவடிக்கை மேற்கொண்டபோதும் எந்த வித பயனும் மக்கள் அடையவில்லை. வட்டக்கச்சிபொதுச்சந்தை உட்பட கட்சன்வீதி உணவுப்பகுதி மாயவனூர் பகுதியிலும் அதிகளவு கட்டாக்காலி நாய்கள் நடமாடி வருகின்றன. தற்போது பதினைந்து நாட்களுக்கு முன் பிரதேச சபையால் கட்டாக்காலி நாய் ஒழிப்பு என வட்டக்கச்சி முழுவதும் பிரகடனப்படுத்தப்பட்டு மற்றும் வீட்டு நாய்களுக்கு தடுப்பூசி வழங்குவதாகவும் கூறியும் எவ்வித பயனும் அடையவில்லை. கட்டாக்காலி நாய்களினால் தொடர்ந்து வீதி விபத்துக்கள் நடைபெற்று வருகின்றன. எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுக்கும் வண்ணம் மக்கள்கேட்டுள்ளனர். (12)

# கைதியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் போது சட்டத்தரணி பிரசன்னமாகியிருக்க வேண்டும்

## இதற்கேற்ப சட்டத்தைத்திருத்த சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

**குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்ட வரை பொலிஸார் கைது செய்யும் நேரத்திலும் பொலிஸ்நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும் தருணத்திலும் சட்டத்தரணியின் பிரசன்னம் இருக்கக் கூடிய வரையில் குற்ற நடைமுறைக் கோவையை திருத்தி அமைக்குமாறு சட்டத்தரணிகள் சங்கம் நீதியமைச்சரைக் கோரியுள்ளது.**

நீதி அமைச்சர் ஜோன் செனவிரட்ணவுடனான தமது முதற் சந்திப்பிலேயே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இதன் பிரகாரம் ஒருவர் கைது செய்யப்படும் சந்தர்ப்பத்திலும் அவர் மீது பொலிஸ் நிலையத்தில குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்திலும் அவருடைய சட்டசார்பாளராகிய சட்டத்தரணிகளது செயற்பாட்டை உறுதிப்படுத்தும் படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. இப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்கவென ஒரு குழுவை நியமிப்பதென நீதி அமைச்சருடன் சட்டத்தரணிகள் சங்கம் ஆலோசனை நடத்தியது.

# பெறுமதி குறைந்தது

(கொழும்பு)

இலங்கை நாணயத்தின் பெறுமதி குறைந்துள்ளபடியால் கடந்த வாரம் 99 ரூபா 45 சதத்தில் இருந்த அமெரிக்க, டொலர் நேற்று 99 ரூபா 91 சதமாக அதிகரித்துள்ளதென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# வைத்தியசாலைக் கட்டிலிலிருந்து கீழேவிழுந்த நோயாளி மரணம்

(கொழும்பு)

கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளில் மேலும் ஒருவர் கடந்த சனிக்கிழமை வைத்தியசாலைக் கட்டிலில் இருந்து தவறிவிழுந்து மரணமாகியுள்ளார்.

இது பற்றித் தெரியவருகையில், கண்டி வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட பின்னர் சிகிச்சைபெற்றுவந்த மடவளையைச் சேர்ந்த டபிள்யூ.எம் செனிவிரட்ன என்ற நோயாளியே சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வைத்தியசாலைக்கட்டிலிலிருந்து தவறி விழுந்து மரணமானவர் ஆவார்.

முன்னதாக சென்ற வாரமும் இவ்வைத்தியசாலையின் 13ஆம் வாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் மரணமடைந்திருந்தார்.

இதேவேளை 200 கட்டில்களே உள்ள கண்டிவைத்தியசாலையில் 3000 நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் 35 கட்டில்கள் மாத்திரமே உள்ள 13ஆம் வாட்டில் 111 நோயாளிகள் அனுமதிக்கப்பட்டிருப்பதையடுத்து ஒரு கட்டிலில் 3நோயாளர்கள் வீதம் படுக்கவைக்கப்பட்டிருந்தனர். இதன்போதே நோயாளர் ஒருவர் கீழே விழுந்து மரணமடைய நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியா செல்லும் கூட்டமைப்பினருடன் ம.ம.முன்னணி இணைந்து கொள்ளும்

## -சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கு விஜயம் செய்யும் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் மலையக மக்கள் முன்னணியும் இணைந்து கொள்ளவிருப்பதாக மலையக மக்கள் முன்னணித்தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசியல்வாதிகளை சந்தித்து, தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து விளக்கமளிப்பதற்காக தமிழ்க் கூட்டமைப்பினர் இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதை தாம் வரவேற்பதாகவும், மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

டெல்லியில் உள்ள இந்திய அரசியல் தலைவர்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சினையின் உண்மை நிலைகளைத் தெரியப்படுத்துவதற்கும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தவும் இந்தச் சந்திப்பு மிக அவசியம் என அவர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (32)

# பொலிசார்மீது கிரனைட் வீசிய தப்பி ஓடிய சிப்பாய் கைது

பொலிசார் மீது 'கிரனைட்' வீசிய, தப்பியோடிய இராணுவச்சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அக்குரஸ்ஸ பிரதேசத்திலுள்ள தொலியத்த எனும் இடத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய இந்தச்சிப்பாயின் நண்பரொருவர் ஏற்கனவே தம்மால் கைது செய்யப்பட்டுள்ளதாக அக்குரஸ்ஸ பொலிசார் கூறியுள்ளனர்.

# ஆசிரியர்களின் பிரச்சினை நடவடிக்கைக்காக பரிசீலிப்பு

## கல்வியமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த மூன்று கிழமைகளில் ஆசிரியர் சங்கங்கள், அதிபர் சங்கங்கள், இலங்கை கல்வி நிர்வாக சேவை அங்கத்தவர்கள், ஆசிரியர் கல்விச்சேவை அங்கத்தவர்கள் ஆகியோரினால் எடுத்துக்கூறப்பட்ட பிரச்சினைகள் கல்வி அமைச்சினால் நடவடிக்கைக்காகப் பரிசீலிக்கப்படுவதாகக் கல்வி அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைகள் பிரதானமாக நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் தொழில்சார் அபிவிருத்தி, சம்பள முரண்பாடு என்பனவற்றை மையமாகக் கொண்டவை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைகளை பொது சேவை ஆணைக்குழுவின் உதவியுடன் முதன்மை அடிப்படையில் உடனடித் தீர்வுகாண சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சு அலுவல்களைப் பணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒப்பந்தகாரரர் அசமந்தம் பாடசாலை கட்டடவேலை ஸ்தம்பிதம்

(அலுவலகசெய்தியாளர்)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் இயங்கிவரும் மூன்று பாடசாலைகளுக்கான புதிய கட்டடங்



(படம்) பிரதீபன்

கள் அமைக்கும் வேலைகள் தென்பகுதி பெரும்பான்மை இன ஒப்பந்தகாரர் ஒருவரின் அசமந்தப் போக்கால் பின்தள்ளப்பட்டுவருவதாக பாடசாலை அதிபர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சிங்களப் படைகளினால் மேற்படிபகுதிகளில் அமைந்திருந்த பாடசாலைக் கட்டடங்கள் அழிக்கப்பட்டது. தற்போது அப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து பாடசாலைகள் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் கட்டட வசதிகள் எதுவும் இல்லாதிருந்த உடுத்துறை மகாவித்தியாலயம், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் நிக்கொட் திட்டத்தின் கீழ் புதிய நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கும் வேலைகள் கடந்த வருடம் ஆரம்பமானது எனினும் அதற்குரிய ஒப்பந்தக் காலம் இவ்வருடம் ஏப்பிரல் 24ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது. இருந்த போதும் இது வரை இதற்குரிய வேலைகள் முற்றுப் பெறவில்லை. இந்த நிலையில் குறித்த ஒப்பந்தகாரர் வேறு சில பகுதிகளில் புதிய கட்டட வேலைகளை ஆரம்பித்து வருவதாகவும் மேற்படி பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவிக்கின்றனர். தென்பகுதி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இந்த ஒப்பந்தகாரரால் பெற்றுக்கொள்ளப்பட்ட இந்த கட்டட வேலைகள் கடந்த மூன்று மாதங்களாக ஸ்தம்பித நிலையிலுள்ளது. கடந்த மூன்று மாதங்களாக வேலைத்தலத்திற்கு குறித்த ஒப்பந்தகாரரோ அவரது பணியாளரோ வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டடங்கள் விரைவாக அமைத்துத் தருவதற்குத் தவறும் ஒவ்வொரு நாளும் இப்பகுதி மாணவர்களின் எதிர்காலத்தையே அதலபாதாளத்தில் தள்ளிவருகிறது. எனவே இந்த பின்தங்கிய நிலையில் இருக்கும் இப்பகுதி மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஒப்பந்தகாரர்களின் இத்தகைய அசமந்தப் போக்கைப் போக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கரிசனை கொண்டு செயற்பட்டு இந்நிலையைப் போக்க வேண்டும் எனவும் அதிபர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (லோ,தீ)

# மாணவியுடன் சேட்டை புரிந்த இளைஞர் விளக்கமறியலில்

(செட்டிகுளம்)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் மாணவி ஒருவர் தனியாகப் போகும் போது அங்க சேட்டை புரிந்த இளைஞன் ஒருவரை வவுனியா நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. நேற்று முன்தினம் மேற்படி இளைஞன் மாணவி தனியாகப் போகும் போது தவறான சொற்பிரயோகங்களும், அங்க சேட்டை புரிந்ததாகவும், பெண் கூச்சலிட்ட போது அருகில் இருந்தவர்கள் இளைஞனைப் பிடித்துள்ளனர். இவரை பாலியல் 22 சட்ட 1995 திருத்தச் சட்டக் கோவையின் 345ஆம் இலக்கப் பிரிவின் கீழ் சிறிலங்கா காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர், பெண், பெண்ணின் தாயார் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பின்னர் சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்க அநுராதபுரம் அனுப்புமாறு வவுனியா மாவட்ட நீதவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். இந்தக் குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் 5வருட சிறைத்தண்டனையினை அனுபவிக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(உடையார்கட்டு)

வள்ளிபுனம் ரமேஸ் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று 2.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டு விழாவை சமூகபொருளாதார வளர்ச்சி நிறுவனமும், பெற்றோரும் இணைந்து சிறப்பாக நிகழ்த்தவுள்ளனர். (19)

## யாழ்.வை.எம்.சி.ஏ முதலாமிடம்

(அலுவலகசெய்தியாளர்)

2003ஆம் ஆண்டிற்கான இலங்கை வை.எம்.சி. ஏக்களுக்கான தெரிவில் யாழ்.வை.எம்.சி.ஏ முதலாமிடத்தினைப் பெற்றுள்ளது.

கடந்த 38வருடங்களுக்குப் பின்பு முதன்முறையாக அகில இலங்கை ரீதியில் யாழ்.வை.எம்.சி.ஏ முதலிடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் வை.எம்.சி.ஏ.ஆரம்பிக்கப்பெற்று 114 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (சோ,கு)

# அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத் திருநாள் நிகழ்வு

முல்லை. மாவட்ட அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத் திருநாள் கடந்த 1ஆம் திகதி கொடியேற்றலுடன் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 12ஆம் திகதி விசேட நற்கருணை வழிபாடு, மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும். 13ஆம் திகதி திருநாள் திருப்பலி காலை 7.00மணிக்கு ஆ[illegible]ாகும் எனவும் அளம்பில் பங்குத்தந்தை யூட் அமலதா[illegible] அடிகள[illegible] தெரிவித்தார். (20)

# மூன்று வீடுகளில் கொள்ளை இருவருக்கு சிறைத்தண்டனை

வவுனியாவில் கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் மூன்று வீட்டுக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட இரண்டு நபர்களுக்கு ஆறு மாத சிறைத் தண்டனை வழங்குமாறு வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். நேற்று முன்தினம் இந்த வழக்கின் விசாரணை எடுக்கப்பட்ட போது சந்தேக நபர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபர்கள் ஏற்கனவே 7 மாதகாலம் சிறைத் தண்டனை அனுபவித்து இருப்பதால் அதனையும் தண்டனை காலமாகக் கொள்ளுமாறும் நீதவான் எம்.இளஞ்செழியனிடம் தெரிவித்தார். இதனை அடுத்து சந்தேக நபர்கள் இருவரையும் ஆறு மாத காலத்திற்கு சாதாரண சிறைத தண்டனைக்கு உட்படுத்துமாறு தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். சந்தேக நபர்கள் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (21)

# ஜாதிக ஹெல உறுமயவின் வளர்ச்சியால் அச்சமடைந்துள்ள ஜே.வி.பி

லக்பிம சிங்களப்பத்திரிகையில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன-

தமிழில்.

**அ.சக்திவேல்**

சந்திரிகா அம்மையார் எதிர்பாராத விதமாக சகோதரர் டில்வின் சில்வாவிடம் இருந்து கன்னத்தில் அடி விழுந்துள்ளது. எவ்வளவு இவர்கள் வெளிப் படையாக நட்புறவு வைத்துக் கொண்டிருந்தாலும் இவர்களிடையே உட்பூசல்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. ஒருவருடகாலத்திற்கு பேச்சுவார்த்தை நடத்தி வெகு சிரமத்தின் மத்தியில் ஜே.வி.பியுடன் இந்தக் கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டனர். ஆனால் சுதந்திரக் கட்சி-ஜே.வி.பிக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் மூலம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுள் இருக்கும் வலதுசாரி பிரிவு வர்க்கத்தினரை தனது வலையில் சிக்கவைத்து தமக்கு ஏற்றபடி அவர்களை வழிநடத்துவதில் தற்பொழுது ஜே.வி.பியினர் வெற்றிகண்டுள்ளனர். இத்தேர்தலில் தாங்கள் போட்டியிட்ட ஒரு இடத்தை தவிர்ந்த ஏனைய இடங்களில் தமக்கு மக்கள் செல்வாக்கும் கட்சியின் வளர்ச்சியும் உள்ளதென சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு எடுத்துக்காட்டியுள்ளனர்.



சூட்டுஒப்பந்தத்தின் பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், சகோதரர்களே எப்படியாவது இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை வீழ்த்தி ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணிக்கு வெற்றியைப் பெற்றுத்தாருங்கள் என மிகத் தாழ்மையுடன் ஜே.வி.பி.யினரைக் கேட்டுக்கொண்டனர். அது இப்பொழுது தங்கள் கட்சியையும் பின்தள்ளி இப்பொழுது தான் கட்சியினுள் முன்னணி வகிப்பதற்கு சகல திட்டங்களையும் தீட்டிய வண்ணம் உள்ளது. முற்போக்கு சிந்தனைகளை முன்வைத்து 1970ஆம் ஆண்டு லங்கா சமசமாஜக் கட்சியும் சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு ஒப்பந்தம் செய்தது. ஜே.வி.பிக்கு கிடைத்த மக்கள் சக்தி என்.எம்.பெரேராவின் கூட்டுக்குக் கிடைக்கவில்லை. அன்றைய இடதுசாரிகளான என்.எம்.பெரேரா பீட்டர் கெனமன் போன்றவர்கள் நாட்டின் பேரின வாதத்தை நிராகரித்தனர். ஆனால் சிறிமாவின் வலதுசாரி இனவாதத்திற்கு அடிபணிந்து தங்களின் இடதுசாரிகள் கைகளை சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு அடகுவைத்து விட்டார்கள். அன்று அவர்கள் தமிழர்களுக்கு அவர்களது உரிமை கொடுங்கள் என சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அழுத்தங்களைக் கொடுத்தனர். பலமுறை பாராளுமன்றத்தில் இக் கோரிக்கைகளை முன்வைத்தனர். ஆனால் அன்றைய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பேரினவாதம் இவர்களின் கோரிக்கையை நிராகரித்தது. ஆனால் இப்பொழுது இனவாதத்தை மேடைகளில் பரப்பி ஆட்சியைக் கைப்பற்றிய போதும் ரணிலின் சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதில் சந்திரிகா மிக தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். இது தற்பொழுது டில்வின் சில்வாவுக்கு பெரும் மனக்குமுறலை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் தற்பொழுது டில்வின் சில்வா அவர்கள் நாட்டின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை மையமாக வைத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் மோதலில் ஈடுபட்டு வருகின்றார். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் நூறு ரூபாய் கொடுத்து வாங்கிய மரக்கறி வகையை இன்று மூன்று மடங்காகக் கொடுத்துவாங்க வேண்டியுள்ளதாக மக்கள் தெருக்களில் கதைப்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு நன்றாகக் கேட்கின்றது.

ஏழைமக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் உணவுப் பிரச்சினைகளை முன்வைத்துத்தான் மக்களின் செல்வாக்கைப் பெற்று ஆட்சிபீடம் ஏறினார்கள். ஆனால் இப்பொழுது அரசாங்கத்துடன் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினைகளை முன்வைத்து முரண்படுவதன் மூலம் மக்களின் எதிர்ப்பு தமக்கு ஏற்படாமல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேல் திணித்து தாங்கள் மக்களின் எதிர்ப்புக்களிலிருந்து தப்புவதற்கு இப்பொழுது ஜே.வி.பி அரசியல் வியூகங்களை அமைத்து வருகின்றது. இவ்வளவு விரைவாக டில்வின் சில்வாவுக்கும், சந்திரிகா அம்மையாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படும் என டில்வின்சில்வா எதிர்பார்க்கவில்லை. இதை சந்திரிகாவும் எதிர் பார்க்கவில்லை. இந்த நாடகம் திறந்வெளி அரங்கிற்கு மேடைஏறி வந்துவிட்டது.

இப்பொழுது ஜே.வி.பி.யினருக்கு எதிரணி ஒன்று தோன்றி உள்ளது. அதுதான் ஜாதிக ஹெலஉறுமய. ஜே.வி.பி.யினர் கால்பதித்த இடங்களில் எல்லாம் ஹெல உறுமய கட்சியும் கால்பதிக்கத் தொடங்கிவிட்டது. தற்பொழுது பல் கலைக்கழகங்களில் கணிசமான செல்வாக்கை ஹெலஉறுமய பெற்றுள்ளமையால் ஹெல உறுமயவின் வளர்ச்சி ஜே.வி.பி.யினரை பாதிக்கத் தொடங்கியுள்ளது. இது ஜே.வி.பிக்கு ஜீரணிக்க முடியாமல் உள்ளது.ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து சமீபகாலமாகப் பிரிந்துசென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்பொழுது கட்சியில் வந்து இணைந்துள்ளனர். விமல்வீரவன்சவும் சனாதிபதி சந்திரிகாவும் தேர்தல் காலங்களில் மேடைப்பேச்சு வீரர்களாக மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்று அரசாங்கத்தை அமைத்தார்கள். ஆனால் மக்களுக்கு அள்ளி வீசிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நிதி வழங்கும் நாடுகள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் நிதியுதவி இல்லை என கைவிரித்துவிட்டன. இப்பொழுது சந்திரிகா அம்மையார் தமிழர் கூட்டமைப்புக்கு அடிபணியவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். இப்பொழுது ஜாதிக ஹெல உறுமய இந்த சமாதானப் பேச்சுக்களுக்கு முழுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. இந்த எதிர்ப்பு கூட்டு அரசின் அடித்தளத்தை தள்ளாட வைக்கும் நிலைமைக்கு கொண்டு வந்துள்ளது. இதில் அதிக பாதிப்பு ஜே.வி.பி.யினருக்கு ஏற்பட்டுள்ளது.அதாவது பல்கலைக்கழக உயர்கல்வி பயிலும் மாணவரிடையே நாட்டுப்பற்று என்ற போர்வையில் இனவாதத்தைப் பயிரிட்டது ஜே.வி.பி.யின் செல்வாக்கு ஜாதிக ஹெல உறுமய பல்கலைக்கழகங்களில் பிரவேசித்துள்ளனர். சரியத் தொடங்கியுள்ளது இந்த ஜே.வி.பி.யை நம்பி இருக்கும் மாணவர்கள் கதி என்ன? இந்த ஹெல உறுமய ஊடுருவலை ஜே.வி.பி. தடுத்து நிறுத்தா விட்டால் பல்கலைக்கழக மாண வரிடையே எதிர்ப்புக்கள் ஏற்பட்டு ஜே.வி.பி. ஹெல உறுமய என்ற வெள்ளத்துடன் அடித்துச் செல்லப்படுவது நிச்சயம்.

அத்துடன் தொழிலாள வர்க்கத்தின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது நாளுக்கு நாள் தொழிலாள வர்க்கத்திடமிருந்து பிரச்சினைகள் கிளப்பிய வண்ணம் உள்ளது. ரணில் விக்கிரமசிங்க புகையிரத ஊழியர்களின் போராட்டம் சுகாதார ஊழியர்களின் போராட்டம் இவை இரண்டையும் ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கு கடும் முயற்சிகள் செய்தார். ஓரளவு அதில் வெற்றியும் கண்டார் ஆனால் ஜே.வி.பி-சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு தொழிலாளர் போராட்டங்களைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு தொழிலாளர் வர்க்கம் கேட்பவற்றைத் தருவதாக வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சியைக் கைப் பற்றினார்கள். ஆனால் இப்பொழுது பொருட்களின் விலை ஏற்றத்தால் இந்த அரசுக்கு எதிராக போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் தொழிலாளர்கள் உள்ளனர். பிரதமர் மகிந்த



ராஜபக்ஷ இந்த தொழிலாளர்களின் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர முயற்சி செய்தாலும் முதலாளி வர்க்க தலையீட்டினால் அவர் எடுக்கும் நடவடிக்கைகளும் பின் தள்ளப்பட்டு நாட்டில் தற்பொழுது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. இதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் நாட்டில் உள்ள பாழடைந்தபள்ளிக் கட்டடங்கள் கிராமங்களில் உள்ள மக்கள் பிரயாணம் செய்யும் பாதைகளையும் திருத்தி அமைப்பதில் கவனம் இல்லை. இவற்றை மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள் மூன்று மாதங்களுக்கு இடையில் இந்த அரசுக்கும் இப்பொழுது எதிர்ப்புக்கள் ஆரம்பித்து விட்டன. இப்பொழுது மக்கள் யார் பக்கம்? இந்நிலையில் இந்த அரசாங்கத்தால் கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்ற முடியுமா எனவே நன்றாக சிந்தித்து எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்திற்கு நல்லதொரு பாடத்தை கற்பிப்பதற்கு எங்களுக்கு நல்லதொரு சந்தர்ப்பத்தைத் தாருங்கள்.

## ஆளும் ஐ.ம.சு. முன்னணி மீது ஜா.ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)

ஆளும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியினர் ஜாதிக ஹெலஉறுமய கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாக ஜா.ஹெல உறுமய ஆளும் கட்சியைக் கண்டித்துள்ளது.

பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சியின் மெய்ப்பாதுகாவலர் படு கொலையுடன் ஹெல உறுமயக் கட்சியை சம்பந்தப்படுத்தி இருப்பது கட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதற்கு அரசாங்கம் பெரும் சூழ்ச்சி செய்து வருவதாக பாராளுமன்ற அங்கத்தவர் பூஜிய அத்துரெலிய தேரர் கூறிஉள்ளார். இது ஹெல உறுமயவின் வளர்ச்சியை பெரிதும் பாதிக்கும். கட்சியை இல்லாதொளிக்க அரசுமுயன்று வருகிறதென்றும் இதன் பின்னனியில்மேலும் சில சக்திகள் இயங்கி வருகிறதென்று அத்துரெலியதேரர்குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவிலிருந்து பால்மாவை இறக்குமதி செய்வது குறித்து பரிசீலனை

(கொழும்பு)

குறைந்த விலையில் பால் மாவை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது. சிறிலங்காவின் வாணிப வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இது குறித்து தெரிவிக்கையில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தால் பால்மாப் பைக்கற் ஒன்றின் விலையை நூறுரூபா வரைகுறைக்க முடியும் என்று கூறியுள்ளார். எனினும் தற்போதைய விலை அதிகரிப்புக் குறித்து கருத்துக் கூற முடியவில்லை என்றும் விற்பனைப் பொருட்களுக்கான விலைக் கட்டுப்பாடு களை விதிப்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்

## தமிழ் மொழி அமுலாக்கம் குறித்து விரைவில் பாராளுமன்றில் சட்டமூலம்

(கொழும்பு)

அரசாங்கத் திணைக் களங்களில் தமிழ் மொழி அமுலாக்கத்தை கிரமமாக மேற்கொள்வது தொடர்பாக விரைவில் பாராளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு தேசிய நல்லிணக்கத்துறை அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார். பதுளைவை.எம்.சி.ஏ. கேட்போர் கூடத்தில்நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு சிறப்பு ரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அமைச்சர் மேலும் கூறுகையில், 60 ஆயிரம் பொலிசார் கடமையாற்றும் பொலிஸ் திணைக்களத்தில் 600 பேர் மட்டுமே தமிழ் தெரிந்தவர்களாகவுள்ளனர். இது பெரும் கவலை தரும் விடயமேயாகும் தமிழ் மக்கள் தத்தம் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு அனைத்துஅரச திணைக் களங்களிலும் தமிழ் மொழி மூலம் கடமையாற்றக் கூடிய உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டியது அவசியமாகும் எனவும்.புதிய அரசியலமைப்பை ஏற்படுத்து முன் ஏற்கனவேயுள்ள அரசியல் அமைப்பின் அதிமுக்கிய நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டும். அதிலுள்ள நல்ல பல விடயங்களை அமுல்படுத்தியாக வேண்டும். இதுகுறித்து சனாதிபதிக்கும் தெளிவுபடுத் தியிருப்பதாகவும் அமைச்சர் டியூ. குணசேகர கூறியுள்ளார்.

# சுதந்திரபுரம் படுகொலை ஆறாம் ஆண்டு நினைவுதினம் இன்று

# சுதந்திரபுரம் எனும் அப்பாவிக்கிராமம் மீது சிறிலங்காப்படைகள் புரிந்த கொடூரம்

ஆ.லோகீசன்

எந்த அடக்குமுறை சக்திகளுக்கும் பணிந்து போகாது தமிழி னத்தின் தனித்துவத்தைக் காப்பாற்று வதற்காக தொடர்ச்சியாக 30 வருடங்க ளுக்கு மேலாகப் போராடிவருகின்ற தமிழ் மக்களின் புனித வரலாறு இரத்தத்தால் எழு தப்பட்டு வருகிறது.

உலகஅரங்கிலே சுதந்திரமாகத் தமக் கென தனிஇலட்சியங்களையும் கொள்கை களையும் வகுத்து அதன்பால் வாழ்ந்து வரு கின்ற ஏனைய இனங்களைப் போல அதே உலக அரங்கில் தமிழினமும் தனக்கே உரித்தான கொள்கைகள் கோட்பாடுகளுடன் வாழ்வதற்கு உரித்துடைய இனம் ஆனால் அதன் சுதந்திரத்தை நசுக்கி ஒரு அடிமைப் பட்ட சமூகமாக சிங்களப் பெரும்பான்மை சமூகத்துக்கு பணிந்து செல் கின்ற இனமாக வாழவேண்டும் என்ற நோக்கில் தமிழ் சமூகம் மீது சிங்கள ஆளும்வர்க்கம் காலத் துக்கு காலம் பல்வேறுபட்ட படுகொலை களை மேற்கொண்டு வந்தது.

சிங்களப் பெரும்பான்மை சமூகத்தின் தமிழினத்தை அடிமைப்படுத்தும் முயற் சிக்கு எதிராகப் போரிட்டு தமிழினத்தின், தமிழ்மொழியின் கௌரவத்தை நிலைநாட் டுவதற்கு எப்போது முனைந்தார்களோ. அப் போது அவர் கள் மீது சிங்களப் பேரின வாதிகளால் கொடூரமான முறையில் இனப் படுகொலை என்கின்ற இன அழிப்பின் புதிய வடிவம் கட் டவிழ்த்து விடப்பட்டது. அன்றில் இருந்து இன்றுவரை தமிழ்மக்களின் வரலாறு இரத்தத்தால் வரையப்பட்டுக் கொண்டே செல்கிறது.

**பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் யுத்த முனையிலிருந்து பல பத்து கிலோமீற்றர்களுக் கப்பால் உடையார் கட்டுக்கு அடுத்ததாக உள்ள சுதந்திரபுரம் கிராமம் சதைத் துண்டங் களாலும் மனித எலும்புகளாலும் இரத்த வெள்ளத்தாலும் பல உயிர்களைக் குடித்து விட்டு எறிகணைகளின் செப்புத்துண்டுகளுடனும் முறிந்த மரங்களுடனும் சிதைந்த வீடுகளுடனும் அந்த அழகிய கிராமமே ரணகளமாகி இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தது.**

தமிழினத்தை பல்வேறுவகைகளிலும் சிதைத்து அதன்ஒருமைப் பாட்டையும் அறிவியல் ரீதியான அதன் முன்னேற்றத தன்மையையும் மொழி மீதும் தேசத்தின் மீதும் அவர்கள் கொண்டுள்ள பற்றுதலை சிதைத்து கேவலமானநிலைக்குத் தமிழினத் தைத் தள்ளிவிடுவதே சிங்களப் பேரினவாத சக்திகளின் திட்டமாக இருந்தது. அதற்காக தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற மட்டக்களப்பு, அம்பாறை, மன் னார், வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை எனப் பல் வேறு பகுதிகளிலும் பெருமளவில் இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் 1998 ஆம்ஆண்டு இதே தினத்தில் வன்னியின் சுதந்திரபுரத்தில் கொடூரத்தனமாக 25க்கு மேற்பட்ட தமி ழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இதன் ஆறாம் ஆண்டு நினைவு தினம்இன்றாகும். எனவே அதுபற்றி நோக்குவோம்.

அன்றைய காலைப்பொழுது எந்தச் சலன மும் இன்றி வழமைபோலவே புலர்ந்தது. எவர்மனதிலும் எந்த சலனமும் இல்லை. அதுபோலத்தான் அந்த 1995 ஆம் ஆண்டு தமிழர்களின் பூர்வீக நிலங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்தைச் சிங்களப்படைகள் கைப் பற்றியவேளை அவர்களின் பிசாசுப்பிடியில் அகப்பட்டுவிடாது தமது உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு வந்து குடியே றிய யாழ்ப்பாணத்து மக்களைஅதிகளவிலும் திருகோணமலை போன்ற ஏனைய மாவட்டத் திலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்க ளையும் கொண்டிருந்த அந்தக் கிராமமும் விடிந்தது.

புலம்பெயர்வால் தமது அன்றாட வாழ்க் கையைக் கொண்டு நகர்த்துவதற்கு கஷ்ட மான நிலையில் வேலைக்குப் புறப்படு வோரும். தமது கல்வியைத்தொடர மாண வர்களும்,கற்பிப்பதற்காக ஆசிரியர்களும் பிறதேவைகளுக்காக ஏனையவர்களும் வழமை போலவே விரைவாகத்தமது வேலைகளைச்செய்து கொண்டிருந்தனர். மெதுவாக மேலெழுந்து காலைக்கதிரவன் இப்போது வெப்பக் கதிர்களை வீசியவாறு மையத்தை நெருங்கிக் கொண்டிருந்தான்.

சின்னஞ்சிறு பாலகர்கள் தனித்தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் வீட்டுமுற்றத்திலும் அதன் அருகிலும் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர். நேரம் நண்பகலை எட்டிப் பிடிப்பதற்காக விரைந்து கொண்டிருப்பதால் குழந்தைகளின் பசியைப் போக்குவதற் காக விரைவாக சமையல்வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர் குடும்பப் பெண் கள்.

இந்தக்காலம் மிகவும் பயங்கரமான காலம். சந்திரிகாவும் அனுருத்தவும்-மாமனும் மருமகனுமாகச் சேர்ந்து தமிழ் மக்களின் குருதியைக் குடித்து உலகிற்கும் சிங்கள தேசத்திற்கும் பால்வார்த்துக் கொண்டிரு ந்தனர். யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிட்ட இறுமாப்பில் வன்னியையும் பிடிப்பதற்காய் 'ஜெயசிக்குறு' நத்தையாய் நகர்ந்து மாங் குளத்தில் நின்றிருந்தது. அதுபோல ஒட்டு சுட்டான் கிளிநொச்சி என சிங்கள இனவாதிகள் சூழ்ந்திருந்தனர்.

நேரம் 11.30 மணி இருக்கும் வானில் திடீரென காற்றை கிழிக்கும் ஓசையுடன் விமானப்படை விமானங்கள். அனைவரும் உசாரடைவதற்கிடையில் அந்த நெருக் கமான சிறிய குடிசைகளைக்கொண்டிருந்த சுதந்திரபும் கிராமம் எங்கும் புகைமண்டலம்- பெரும் வெடியோசை கதறல் ஓசைகள் வானைக்கிழித்தன. அடுத்தவினாடிக்குள் இரண்டாவது தாக்குதலும் நடந்துவிட்டது.

அனைவரும் அப்படியே கிடந்தனர். அசைய முடியாதபடி மாங்குளம்,கரிப்பட்ட முறிப்பு, ஒட்டுசுட்டான்ஆகிய இடங்களில் நிலைகொண்டிருந்த சிங்களப்படைகள் ஆட்லறி பீரங்கிகளால் சரமாரியாகக் குண்டுமழை பொழிந்து கொண்டிருந்தனர். சுமார் 25 நிமிடங்களுக்கு மேலான தாக்கு தலை , ஏதும் அறியாத அப்பாவிக் கிராம மக்கள் மீது சிங்கள இன வெறிப்படைகள் நடத்தின.

தாய்,தந்தையரின் முன்னால் பிள்ளை களும்,பிள்ளைகளின் முன்னால் தாய், தந்தையருமாக 25க்கும் அதிகமான வர்கள் உடல்சித றுண்டு உருக்குலைந்த நிலையில் பேரின வாத உயிர்ப்பசிக்கு இரையாகினர். 50இற்கும் அதிகமானவர்கள் குண்டுச்சிதறல் களினால் தைக்கப்பட்டு காயமடைந்தனர். உலகில் எங்கும் நடக்காத கொடுமை அந்த சுதந்திரபுரத்தில் நடந்தது. எந்த எதிரிக ளிடமிருந்து உயிரைக்காப்பாற்ற வேண்டும் என்று வன்னியில் வாழ்வோம் என்று வந்தார்களோ அதே வன்னி மண்ணில் அதே

இனவெறி நரிகளின் உயிரைப் பறிக்கும் செப்புக்குண்டுகளுக்கு இரையாகி மாண்டுபோனார்கள்.'மகனே அந்த முத் தத்தில அண்ணாக்களோடு சேர்ந்து விளை யாடு அம்மா இப்ப சமைச்சு சாப்பாடு தரு கிறேன்.' என்று குழந்தையின் பசித்த வயிற் றுக்குக் கதை கூறிவிட்ட சில நொடிகளில் தனது மூ[illegible] பாலகர்களினதும் இறந்த உடல் கூட[illegible] [illegible]து [illegible] அந்த உடல்சதை களைக் குவித்துவைத்து ஐயோ இதுதான் என்ர மூத்தவன், இரண்டாவது,கடைசியைக் காணவேயில்லை என்று கதறி ஓலமிட வேண்டிய அவலம் இங்கே நிகழ்ந்தது. எந்தச்சடலம் யாருடையது என்று இனங் காண முடியாமல் சதைத்துண்டங்களாய் இருந்தன.

பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் யுத்த முனையிலிருந்து பல பத்து கிலோ மீற்றர்களுக்கப்பால் உடையார்கட்டுக்கு அடுத்ததாக உள்ள சுதந்திரபுரம் கிராமம் சதைத் துண்டங்களாலும் மனித எலும்புக ளாலும் இரத்த வெள்ளத்தாலும் பல உயிர் களைக் குடித்து விட்டு எறிகணைகளின் செப்புத்துண்டுகளுடனும் முறிந்த மரங்களு டனும் சிதைந்த வீடுகளுடனும் அந்த அழகிய கிராமமே ரணகளமாகி இரத்தம் பாய்ந்துகொண்டிருந்தது. எமது விடிவிற்கான நீண்டகாலப் பயணத்தில் 1998 ஆம்ஆண்டு ஆனி மாதம் 10 ஆம் திகதி அன்று காலை மலர்ந்த கதிரவன் மதியத்தைக் கடக்கு முன்னே தன்சாட்சியாய் அன்றைய நாளை எமது தேசத்தின் உறவுகளின் இரத்தத் தால்பொறித்துவிட்டு மெதுவாக மறைந்து கொண்டான்.

இப்படித்தான் தமிழினம் நீண்ட படுகொலை .வரலாற்றைக் கடந்து இன்றுவரை விடுதலைக்கான தனது உறுதி தளராத பயணத்தைத் தொடர்ந்துவருகின் றது. அந்த வகையில் இன்றைய நாள் தமிழர்களின் வரலாற்றுத்தொடரில் துயர் படிந்த நாளாகவே என்றும் இருக்கும்.

## சுதந்திரபுரத்தின் சோகம் இது...

சுந்தரமாய் சிரித்திருந்த சிற்றூர்....
சுடுகாடாய் மாறிநின்ற..... கொடுமை கேளீர்.......

அந்நியரின் அவலமதால் அடுக்கடுக்காய்
செந்நீரில் நனைந்து நின்ற சோகம் கேளீர்..........

வையத்திலதுபோல் எங்கும் காணவில்லை...யிச்
சுதந்திரபுரமெரிந்த சோகம்....
நிரந்தர மில்லை..யிவ் வாழ்வு - எம்
நிம்மதிக்கேனும் நிலைத்திடுமா.... ஓர் பாதை...

காலையில் விழித்தவர் -கடன்களை -முடித்தவர்
சாலையில் நடந்தவர்- சங்கதி கதைத்தவர்..
கூவி வந்த 'ஷெல்லும்'- வான்
குண்டுகளும் துளைக்க
ஆவி துறந்தங்கே- அவலமுற்று மடிந்தனரே....
ஏவி விட்டவனும்- எடுபிடியாய் உழைத்தவரும்

'பாவிகள்' என்றே பறைசாற்ற வைத்த கதை...
சதிராடி வந்த 'கிபிர்'
சரிந்து விட்டகுண்டுகளும்
கரிப்பட்ட முறிப்பினின்றும்
கருகி வந்த எறிகணையும்.....
வெறியாடிக் கொன்றவுயிர்
கொஞ்சமல்ல - இருபத்தைந்து...
பொன்னுடலில் புண்பட்டோர்
அதனிலும் இரு மடங்கு ......

தேடியுழைத்து -தன்நிலத்தில் குடியிருந்தோர்
கூடிக் கொலையுண்ட- கொடுமையிதே !
வாடியெம் மலர்கள் வழி நீளம் கிடந்தார்...
தேடியெவர் தருவார் - இந்தச்
செந்தமிழர் வாழ்வுதனை.....

பார்வையற்றோரும் பரிதவித்தோர் அக்கணத்தில்...
நேர்மையற்ற நெஞ்சத்தார் நீசச் செயலாலே...
ஆண்ட பரம்பரைக்கு ஏனிந்த அவல வாழ்வு ....
நீண்ட வரலாறாய் தொடர்வதுவா எம் தாழ்வு.....
பூண்ட சபதங்கள் புத்துயிர் தான் பெற்றிடாதோ......
மாண்ட எம்மவர் - கனவு நிறைவேறிடாதோ....

சுதந்திரபுரத்தின் சுதந்திரம் மட்டுமல்ல.....
சுதந்திரம் மறுக்கப்பட்ட தேசமே மீள வேண்டும்
நிரந்தரமாய் ஓர் விடுதலை வேண்டும்......
நிம்மதியாய் இங்கோர் வாழ்வு வேண்டும்.!

ஆக்கம்:- 'புங்கையூர்'
காந்தன்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ் மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான கேள்வி கோரல்

**(குறிப்பு- 2004 ஏப்ரல்,மே,யூன் மாதங்களுக்கான உலர்உணவு விநியோகத்திற்காக என்னால் 2004. 06.01 ஆம் திகதியன்று கோரப்பட்ட கேள்விகளில் 2004 ஏப்ரல் மாதத்திற்கான கேள்வி மாத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு 2004 மார்ச்,ஏப்ரல் மாதங்களுக்கு இதன் கீழ்க் குறிப்பிடப்படும் கேள்வி கோரப்படுகின்றது.**

01 யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும்குடும்பங்களுக்கான 2004, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கென கீழ்த்தரப்பட்டுள்ள தொகை சிவப்பு நாட்டரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களிடம் (வரைவுள்ளது.) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கீடுசெய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| | | அரிசியின் அளவு | |
|---|---|---|---|
| இல | ப.நோ.கூ.சங்கம் | மார்ச் 2004 (MT) | ஏப்பிரல் 2004 (MT) |
| 01 | சாவகச்சேரி | 190 | 190 |
| 02 | கைதடி | 70 | 70 |
| 03 | கொடிகாமம் | 135 | 135 |
| 04 | உடுப்பிட்டி | 32 | 32 |
| 05 | கட்டைவேலி நெல்லியடி | 45 | 45 |
| 06 | பருத்தித்துறை | 114 | 114 |
| 07 | புலோலி | 27 | 27 |
| 08 | மருதங்கேணி | 80 | 80 |
| 09 | யாழ்ப்பாணம் | 311 | 311 |
| 10 | நல்லூர் | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 |
| 12 | நீர்வேலி | 115 | 115 |
| 13 | மானிப்பாய் | 131 | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 | 90 |
| 15 | அளவெட்டி மல்லாகம் | 64 | 64 |
| 16 | தெல்லிப்பளை | 150 | 150 |
| 17 | சங்கானை | 183 | 183 |
| 18 | சுன்னாகம் | 196 | 196 |
| 19 | புங்குடுதீவு, நயினாதீவு | 40 | 40 |
| 20 | வேலணை | 45 | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 | 70 |
| 22 | காரைநகர் | 55 | 55 |
| 23 | தீவகம் | 12 | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 | 30 |
| | மொத்தம் | 2500 | 2500 |

02 கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500/=யை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.06.03ஆம் திகதி தொடக்கம் 2004.06.17ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணிதொடக்கம் பிற்பகல் 3.00மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03 மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500/=யை அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப்படிவங்களையும்,கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

04 கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக (புழுங்கல்) இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05 பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவங்களை தலைவர்,மாவட்டக் கேள்விச்சபை, மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்(அரசாங்க அதிபர்,யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளதபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ்செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக(கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.06.18 பிற்பகல் 2.00மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

06 கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "சிவப்பு நாட்டு புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

07 கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

08 ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

09 கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது.மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்க மாட்டாது.

10 கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்டகேள்விச்சபை/ மாவட்டச்செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**08.06.2004**

(சி-9712)

## -மன்மோகன்சிங்-அத்வானி பேச்சுவார்த்தை தோல்வி-

# எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பு நடவடிக்கையால்

# இந்தியாவில் இரு அவைகளும் மீண்டும் ஒத்திவைப்பு



(புதுடில்லி)

**இந்திய மக்களவை மற்றும் மாநிலங் களவை எதிர்க்கட்சியினரின் பலத்த எதிர்ப்பினாலும் வெளிநடப்பினாலும் நேற் றும் இரண்டாவது நாளாக இரு அவை களும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.**



நேற்று முன்தினம் இருசபை களும் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் எல்கே. அத்வானியுடன் இரு அவை களையும் சுமுகமாகத் தொடர்ந்து நடத்துவது குறித்து பிரதமர் மன் மோகன்சிங் நடத்திய பேச்சுவார்த் தையும் தோல்வியில்' முடிவடைந் துள்ளதையடுத்தே நேற்று கூடிய இரு அவைகளும் எதிர்க்கட்சி யினரின் பலத்த எதிர்ப்பு நடவடிக்கை யினால் ஒத்திவைக' கப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பமான மக்களவை யின் கூட்டத் தொடரில் ஊழல் மற்றும் மோசடி பற்றி தேசிய சனநாயகக் கூட்டணி விமர்சனம் செய்ததுடன், அதில் சம்பந்தப் பட்டவர்கள் மத்தியமைச்சரவை யில் இருக்கக் கூடாது என்பதற் குப் பிரதமர் உடனடியாகப் பதில ளிக்க வேண்டும் என்று கூச்ச லிட்டுள்ளனர். பின்னர் வெளிநடப்பு செய்துள்ளனர் இதனால் மக்களவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் மாநிலங்களவையும் நேற்று ஆரம்பமானது தேசிய சனநாயகக் கூட்டணியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். பதிலுக்கு காங்கிரசும் எதிர்ப்புக் காட்டியதில் அமளி ஏற்பட்டது. இதனையடுத்து மாநிலங்களவைத் தலைவர் மாநிலங்களவையை ஒத்திவைத் துள்ளார்.

## சிறியரக விமானம் வெற்றிகரமாகப் பரீட்சிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் வடிவமைக்கப் பட்ட 'சாசஸ்' என்ற சிறிய பய ணிகள் விமானம் இரண்டுமுறை யாகப் பறக்கவிடப்பட்டு வெற்றி கரமாகப் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

பெங்களூர் விமானப்படை விமானநிலையத்தில் நடைபெற்ற இந்தச் சோதனைப் பறப்பின்போது சுமார் இருபது நிமிடம் பறந்து தரையிறங்கியது.

## பரிசீலனை

கர்நாடகம் தமிழகத் திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்பதற்காக காவிரி நதிநீர் ஆணையத்தை கூட்டு வதற்கு மத்தியரசு பரிசீலனை செய்திருக் கின்றது. இதனைய டுத்து தமிழக கர்நாடகம் இரு மாநிலங்களுக் கும் காவிரி நீர்ப்பிரச்சினையை ஆராய்வதற்கு நிபுணர்கள் குழுவொன்றை அனுப்பிவைத் துள்ளது.

# தமிழகத்திற்கு உடனடியாக தண்ணீரை திறந்து விடும் சாத்தியம் இல்லை

### கர்நாடக அமைச்சர் வி.சி.ஆர் சிந்தியா தெரிவிப்பு

(சென்னை)

தமிழகத்திற்கு உடனடியாக தண்ணீர் திறந்துவிடும் சாத்தியம் இல்லை.

இவ்வாறு கர்நாடகாவின் மாநில அமைச்சர் வி.சி.ஆர். சிந் தியா பெங்களூரில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் கூறி யுள்ளார்.

அத்துடன் தண்ணீர் திறப்பது பற்றி இதுவரை தமக்கு பிரத மரிடமிருந்து எவ்விதத் தக வல்களும் கிடைக்கவில்லை என் றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே மத்தியரசின் குழு வொன்று வர இருப்பதாக கூறப் படுகின்றது என்றும் கர்நாடகாவின் எம்.பிக்களும், காவிரி நீர் பிரச்சினை தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க வுள்ளனர் இதற்காக நேரம் ஒதுக்கு மாறு பிரதமர் அலுவலகத்திடம் கேட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## வேலை தேடிச் சென்ற 5 இந்தியர் மலேசியாவில் சித்திரவதை

(புதுடில்லி)

வேலை தேடிச் சென்ற இந்தியர்கள் ஐந்து பேர் மலேசியாவில் சித்திரவதை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பரமகுடியிலுள்ள தனியார் நிறுவனம் மூலம் ஒருவருக்கு ஒருஇலட்சத்து 70 ஆயிரம் ரூபா வீதம் செலுத்தி ஐந்து பேரும் மலேசியா சென்றுள்ளனர். ஆனால் ஐந்து பேரும் ஒரு அறையில் அடைத்து வைத்து சித்திரவதை செய்யப்படுவதாக ஐந்து பேரில் ஒருவரான வீரமணி என்பவர் தமது உறவினருக்கு கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு எனும் பெயரில் மலேசியா வருபவர்கள் அடைத்து வைத்து சித்திரவதை செய்யப்படுவதாகவும் பலர் மலேசியாவில் பிச்சை எடுப்பதாகவும் எழுதி யுள்ளார். இதனையடுத்து அவர்களை மீட்பதில் பரமகுடி பொலிசார் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

## 06 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### லெப். கேணல் அன்பு / அம்மா



வயித்திலிங்கம் திருகேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

தோற்றம்

03 - 09 - 1965

வீரச்சாவு

10 - 06 - 1998

10.06.98 நாள் அன்று சுதந்திரபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கிபிர்த்தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் பொதுமக்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்.

(4577)

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

| ஜனனம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 1980 | | 1997 |
| - | | - |
| 03 | | 06 |
| - | | - |
| 04 | | 10 |



### வீரவேங்கை – இந்திரா

**(பிறேமரஞ்சினி - சிவசாமி)**

*வசாவிளான் - யாழ்*

இளையவளே! இந்திராவே!
பள்ளிப்படிப்பதனை பாதியில் நிறுத்தி
துடிப்புடனே அண்ணன் அணி சேர்ந்து
மகிழ்வுடனே களம் சென்று
துணிந்து நீயும் போராடி - உன்
பொன்னுடலை இம் மண்ணிற்கு
அர்ப்பணித்து கல்லறையில் துயில் கொள்ளும்
காவியத்திருமகளே - உன்
க்னவு நனவாகும் வெகுவிரைவில்

இந்நாளில் வீரசுவர்க்கமடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்.

கரடிப்போக்கு.

(4573)

# அறிவித்தல்

## மீதிகளை உறுதிசெய்யுங்கள்

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சுயசார்பு தொழில்முயற்சி நிதியமூடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங் களில்1990இலிருந்து 1996 வரையான காலப்பகுதியில் சேமிப்புச் செய்தவர்களும் கடன் பெற்றவர்களும் தங்களது மீதிகளை 14.06.2004 இலிருந்து 19.06.2004 வரை யான காலப்பகுதியில் அவ்வப்பகுதியில் இருக்கின்ற தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டச்செயலகங்களில் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். மீதிகளை உறுதிப்படுத்தச் செல்லும் போது தங்களுக்கு வழங்கப்பெற்றிருந்த சேமிப்புக் கையேடு சான்றிதழ் போன்ற ஆவணங்களைக் கொண்டு செல்லுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

### தமிழர் புனர்வாழ்வுக்கழக தொடர்புச் செயலகங்கள்

| | |
|---|---|
| யாழ். மாவட்டம் | - 83\2 காங்கேசன்துறை வீதி, கொக்குவில் |
| கிளிநொச்சி மாவட்டம் | - வலயக் கல்விப்பணிமனை முன்பாக கிளிநொச்சி. |
| வவுனியா மாவட்டம் | -1.வைரவப்புளியங்குளம் வவுனியா.<br>-2.நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம் கனகராயன்குளம் |
| மன்னார் மாவட்டம் | -1.இல.09 பிரதான வீதி மன்னார்.<br>-2 உப செயலகம் அடம்பன். |
| முல்லைத்தீவு மாவட்டம் | -கைவேலி -பரந்தன் சாலை புதுக்குடியிருப்பு. |

சுயசார்பு தொழில் முயற்சி நிதியம்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

(சி-9705)



சீனாவுக்கு எடுத்து வரப்பட்ட ஒலிம்பிக் ஜோதி நேற்று சீனப் பெருஞ்சுவர் வழியாக வீரர் ஒருவரால் ஏந்திச் செல்லப்படும் காட்சி.




# சாதனை வீரர்களான ஜோன்ஸ், கொமரி ஜோடி

## முதற்தரப் போட்டிகளில் கலந்து கொள்ள சம்மதம்



தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பாவித்த குற்றச்சாட்டின் பேரில் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டிருந்த அமெரிக்க குறுந்தூர ஓட்ட இணையான மரியன் ஜோன்ஸ், ரிம்மொன்ட் கொமரி இருவரும் இன்னும் இரு வாரங்களில் முதல் தரப் போட்டிகளில் பங்கேற்க சம்மதம் தெரிவித்துள்ளனர்.

போட்டிகளின் பணிப்பாளர் ரொம் யோர்தான் இது பற்றி ஊடகம் ஒன்றுக்கு தெரிவிக்கும்போது, 2002ஆம் ஆண்டில் சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் ஐந்து பதக்கங்களைப் பெற்று உலக சாதனை படைத்த ஜோன்சும், 100 மீற்றர் போட்டியில் சாதனை படைத்த ரிம்மொன்ட் கொமரியும்வரும் 19ஆம் திகதி நடைபெறும் கிரான் பிரிக்ஸ் போட்டி களில் பங்கெடுக்கவிருப்பதாகக் கூறியுள் ளனர். இது அமெரிக்க ஒலிம்பிக் போட்டி களில் பங்குபற்ற தகுதிபெறும் போட்டியாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க போலதைப் பொருள் தடை நிறுவன அதிகாரியுடன் சென்ற மாதம் சந்தித்துப் பேசிய போது முன்னணிப் போட்டிகளில் பங்கேற்கும வீரர்களை இறுதிப் போட்டியிலும் காணலாம். வெகு சிலர் ஒலிம்பிக்கிற்கு விடை கொடுத்தாலும் மரியன், கொமரி ஆகியோரின் திறனைக் கடைசி வரை காணலாம் என்று யோர்தான் கூறியிருக்கின்றார். போதை மருந்துப் பாவனையில் ஈடுபட்ட நால்வரில் இவர்களின பெயரும் இடம்பெற்றிருப்பினும் ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் சென்றால் ஒலிம்பிக் போன்ற போட்டிகளில் பங்கேற்க முடியாது போகும் என்றும் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.



ஒட்டாவாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான கிரான்ட் பிரிக்ஸ் தங்கப் பதக்கத்துக்கான தடை தாண்டல் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்கும் கனடாவின் பெர்டிட்டா மெலிசியா.

# முன்னணி டென்னிஸ் வீரர்களுக்கு மீண்டும் தோல்வி



பிரிட்டனில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்டெல்லா ஆர்ட்டோயிஸ் ஒப்பன் டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்றிலேயே முன்னணி வீரர்களான மார்க் பிலிப்போசிசும் ஆந்ரே அகாஸியும் தோல்வி அடைந்து வெளியேறினர்.

லண்டனில் புகழ்பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் இன்னும் சில தினங்களில் ஆரம்ப மாகவுள்ள நிலையில் அங்கு அதற்கான பயிற்சிப்போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.

இப்போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலியாவின் பிரபல வீரரான பிலிப்போசிஸ் உலகத்தர வரிசையில் 866 ஆவது இடத்தில் உள்ள பிரிட்டனின் மெனாகனைச் சந்தித்தார். இதில் மெனாகன் மிகச் சிறப்பாக விளையாடி 7-6,7-6 என்ற நேர் செட்களில் பிலிப் போசிசை வீழ்த்தி அதிர்ச்சி அளித்தார்.

இதேபோன்று மற்றொரு முன்னணி வீரரான அமெரிக்காவின் ஆந்ரே அகாஷியும் தகுதிச் சுற்றிலேயே தோல்வி அடைந்தார். ரஷ்யாவின் இகோர் ஆன்ரேயிடம் 4-6,7-6,7-6 என்ற செட்டில் தோல்வி அடைந்தார். இதனால் அகாஸியின் 800 ஆவது பட்டம் வெல்லும் வாய்ப்பும் விம்பிள்டன் போட்டிக்கான அவரது தயாரிப்பும் தோல்வியில் முடிந்தது.

இதேவேளை நடந்து முடிந்த பிரெஞ் பகிரங்க டென்னிஸ் போட்டியில் முதல் போட்டியிலேயே அகாஸி அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

# 'யூரோ 2004' பயிற்சிக் கால்பந்து போட்டி; ஜேர்மனி, ஹாலந்து அதிர்ச்சித் தோல்வி

'யூரோ 2004' கால்பந்து தொடருக்கான பயிற்சிப் போட்டியில் ஜேர்மனி 0-2 என்ற கோல் எண்ணிக்கையில் ஹெங்கேரி அணியிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்துள்ளது.

யூரோ 2004 கால்பந்து போட்டிகள் போர்த்துக்கல்லில் வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான கடைசிக் கட்டப் பயிற்சிப் போட்டிகள் லிஸ்பென் நகரில் தற்போது நடந்து வருகின்றது.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற பயிற்சிப் போட்டி ஒன்றில் பலம்மிக்க ஜேர்மனி 'குட்டி' அணியான ஹெங்கேரி அணியை எதிர்த்து விளையாடியது.

இதில் ஜேர்மனி அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. இதேபோல் மற்றொரு போட்டியில் ஹாலந்து அணி 0-1 என்ற கோல் கணக்கில் அயர்லாந்து அணியிடம் தோற்றுப் போனது. வரும் 15 ஆம் திகதி ஜேர்மனி தனது முதற் சுற்று ஆட்டத்தில் ஹாலந்தை சந்திக்கவுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளும் பயிற்சிப் போட்டியில் தோல்வி அடைந்துள்ளமை அந்நாட்டு ரசிகர்களை ஏமாற்றமடையச் செய்துள்ளது. மற்றொரு முக்கிய போட்டியில் பிரான்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் உக்ரேனை வீழ்த்தியது.

## சிறியானி குலவன்ச ஓய்வு பெற்றார்

சிறிலங்காவின் 100 மீற்றர் தடைதாண்டி ஓட்ட தேசிய வீராங்கனையான சிறியானி குலவன்ச விளையாட்டுத்துறையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்த 15 வருடமாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக போட்டிகளில் கலந்து கொண்ட சிறியானி நேற்று முன்தினம் தனது ஓய்வு அறிவிப்பை உத்தியோக பூர்வமாக வெளியிட்டார். சிறிலங்காவில் உள்ள சிரேஷ்ட மெய்வல்லுநர் வீராங்கனையாக சிறியானி சர்வதேச ரீதியில் சிறிலங்காவிற்கு பல பதக்கங்களை பெற்றுக்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்துவரும் ஒருநாள் போட்டி மெக்ராத்துக்கு சவாலானது

## சோபிக்க தவறின் டெஸ்ட் அணியில் இடம் இல்லை!

### தெரிவுக்குழுவின் உயர் அதிகாரி ஹோன்ஸ்

அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சிறிலங்காவுக்கெதிரான போட்டி கிளன்மெக்ராத்துக்கு கடினமானதாக இருக்கும் என தெரிவுக்குழுவின் உயர் அதிகாரியான ட்ரவர் ஹோன்ஸ் தெரிவித்துள்ளார்.

கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த ஒருவருடமாக போட்டிகளில் பங்கெடுக்காதிருந்த மெக்ராத் பலம் குறைந்த சிம்பாப்வேக்கெதிரான ஒரு நாள் போட்டிகளில் கடந்த மாதத்தில் கலந்து கொண்டார்.

அவர் தற்போது எதுவித அழுத்தங்களும் இன்றி இருப்பதாகவும் சிறிலங்காவுடனான போட்டி அவருக்கு மிகமுக்கியமானது எனவும் ஹோன்ஸ் தெரிவித்துள்ளார். ஆயினும் மக்ராத் ஜூலையில் நடைபெறவுள்ள ஒரு நாள் போட்டிகளில் திறம்பட விளையாடாவிடில் அவரது டெஸ்ட் போட்டி சந்தேகத்துக்கிடமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

மெக்ராத் 95 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 430 விக்கெட்டுக்களை வீழ்த்தி தனது நாட்டில் ஷேன் வோர்னுக்கு அடுத்த படியாகவுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மற்றுமொரு வேகப்பந்து வீச்சாளர் பிரட்வில்லியம்ஸ் முதுகில் பிடிப்பு காரணமாக சிம்பாப்வே தொடருடன் ஓய்வில் இருக்கிறார். பரிசோதனைகள் மூலம் வருத்தம் கடுமையானதல்ல எனத் தெரிந்தாலும் சிறிலங்காவுக்கெதிராக அவர் ஆடுவது நிச்சயமற்றதாகும். அவர் பங்கு பற்றாவிடின் இளம் வீரர் ஷோன் டெய்ட் அணியில் சேர்ந்துக் கொள்ளப்படுவார்.

# சர்ச்சைக்குரிய 'தூஸ்ரா' பந்து வீச்சுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் கிடைக்கும்

### முரளிதரன்



தூஸ்ரா பந்து வீச்சுத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் இரசாயனப் பரிசோதனைகளின் பின் அதற்கு சட்ட ரீதியான அந்தஸ்துக் கிடைக்குமென முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சம்மேளன விதிகளுக்கமையவே தூஸ்ரா பந்தினை வீசுகின்றேன். இதன் மூலம் விசேட வாய்ப்பொன்றினை பெறுவதாக நான் நம்பவில்லை. தற்போது இடம்பெற்றுவரும் பரிசோதனைகளின் நிறைவில் தூஸ்ரா பந்து வீச்சு சட்ட ரீதியான அந்தஸ்தினைப் பெற்றுவிடுமென்றும் முரளி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் தூஸ்ரா பந்து வீச்சுக்கு தடை விதித்தாலும், மேற்கு அவுஸ்திரேலியாவில் நடாத்தப்பட்ட பரிசோதனைகளில் அதன் சட்ட ரீதியற்ற தன்மை பற்றி பூரணமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பந்து வீச்சின் வேகத்தை அதிகரித்து அணியில் விளையாடத் தகுதிபெறுவேன்

### இந்திய வேகப் பந்து வீச்சாளர் பாலாஜி!



பந்து வீச்சின் வேகத்தை அதிகரித்து இந்திய அணியில் விளையாடுவதற்கான முழுத் தகுதியைப் பெறப்போவதாக வேகப்பந்து வீச்சாளர் எல். பாலாஜி தெரிவித்துள்ளார்.

இந்திய பந்துவீச்சாளர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி பெங்களூரில் நடைபெற்று வருகின்றது.

உடற்பயிற்சியாளர் கிரகர்சிங்கின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றுவரும் இப்பயிற்சியில் தமிழகத்தைச் சேர்ந்த வேகப் பந்து வீச்சாளர் எல். பாலாஜி பங்கேற்றுள்ளார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமது பந்து வீச்சின் வேகத்தை அதிகரித்து இந்திய அணியில் விளையாட தான் தகுதி பெறுவேன் எனக் கூறினார்.

அடுத்து நடைபெறவுள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆசியக் கோப்பை மற்றும் ஆம்ஸ்ரடாம் போட்டிகளுக்காகத் தம்மைத் தயார்ப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த பயிற்சி முகாமில் வேகப்பந்து வீச்சாளர் சாகீர்ஹான், இர்பான் பதான், ஆசிஸ் நெய்ரா, அஜித் அகாக்கர் உள்ளிட்ட பந்து வீச்சாளர்களும் பங்கேற்றுள்ளனர்.

# ஷேன் பொண்ட் நாடு திரும்பினார்

நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷேன் பொண்ட் அணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றார். இவர் இங்கிலாந்துடனான இறுதிப் போட்டியில் பங்கேற்கமாட்டார்.

முதலாவது டெஸ்ட் போட்டியில் இவர் பங்குபற்றாததுடன் இரண்டாவது போட்டியிலும் இவர் பதில் வீரராகவே செயற்பட்டார்.

29 வயதான பொண்ட் முன்னர் முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக ஒரு வருடம் ஓய்வில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மைக்கல் சிலேட்டர் ஓய்வு பெற்றார்

அவுஸ்திரேலிய அணியின் அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மைக்கல் சிலேட்டர் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 74 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 14 சதங்கள் அடங்கலாக 5312 ஓட்டங்களை பெற்றுள்ளார். தற்போது 34 வயதுடைய மைக்கல் சிலேட்டர் 42 சர்வதேச ஒரு நாள்போட்டிகளில் விளையாடியிருக்கிறார்.

# சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர்

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான அரை மரதன் ஓட்டம் (ஆண்கள்), சைக்கிள் ஓட்டம் (பெண்கள்), சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்) போட்டிகள்-2004இன் முடிவுகள் பின் வருமாறு;

**அரை மரதன் ஓட்டம் (ஆண்கள்)**

முதலாமிடம் :- ஆ.பேனாட், தருமபுரம் ம.வி.

இரண்டாமிடம் :- ஏ.விஜிதரன், பளை மத்திய கல்லூரி.

மூன்றாமிடம் :- கோ.சுரேஷ்கண்ணா, அக்கராயன்ம.வி.

**சைக்கிள் ஓட்டம் (பெண்கள்)**

முதலாமிடம் :- செல்வி விடிவெளியா நிலுசினி, கிளிநொச்சி ம.வி.

இரண்டாமிடம் :- செல்வி க.நிசாந்தினி, கனகபுரம் ம.வி.

மூன்றாமிடம்:- செல்வி.அ.கமலவேணி, புனித பற்றிமா றோ.க.

**சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்)**

முதலாமிடம் :- கி.ஐங்கரன் உருத்திரபுரம் ம.வி

இரண்டாமிடம் :- பா.சுதர்சன், கிளிநொச்சி ம.வி.

மூன்றாமிடம் :- வி.நரேஸ்குமார், கிளிநொச்சி மத்திய கல்லூரி. (சோ.கு)



### சிந்தனைக்கு

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
10-06-2004

## சனநாயகப் பாரம்பரியம்

தென்னிலங்கையில் உள்ள பாதாள உலகக் கோஷ்டியினரின் பின்னணியில் பலம் பொருந்திய அரசியல்வாதிகள் இருப்பதாகத் தகவல்கள் வெளியானதுண்டு. ஆனால் தற்பொழுது சிறிலங்கா பாராளுமன்றத்தில் இடம்பெறும் சம்பவங்கள் சிறிலங்கா அரசியல்வாதிகளே பாதாள உலகக் கோஷ்டியினராகச் செயற்படத் தொடங்கிவிட்டனரோ என்ற சந்தேகத்தை எழவைத்துள்ளது.

ஏனெனில் சிறிலங்காவின் பாராளுமன்ற உறுப்பினர் இன்று ஆட்கடத்தல் அடிதடி, திருட்டு போன்றவற்றில் நேரடித் தொடர்புபட்டவர்களாக மாறிவருகின்றனர். குறிப்பாக 13ஆவது பாராளுமன்றம் கூடிய பின் நடந்த மூன்றாவது அமர்வும் கூச்சல் குழப்பம் என்பவற்றுடன் நடந்தேறியது மட்டுமல்ல ஆட்கடத்தல், தாக்குதல் என வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

13ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வே சபாநாயகர் தெரிவினால் பெரும் அமளிதுமளிப்பட்டது. ஆளும்கட்சியினர் வாக்குப்பெட்டி மீது ஏறியிருந்து குழப்பம் விளைவித்ததோடு எதிர்த்தரப்பில் இருந்த ஒரு தரப்பினர் மீது வசைமாரியும் பொழிந்தனர். ஜே.வி.பியினரின் வசைப்பேச்சுக் காரணமாக ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் கூனிக்குறுகிப் போகவேண்டிய நிலை உருவாகியது.

இப் பௌத்த பிக்குகள் மீது புத்தகங்களும் வீசப்பட்டன. அவர்கள் அச்சுறுத்தவும் பட்டனர். இவர்கள் பிக்குகள் என்பதற்கும் அப்பால் மனிதர்கள் என்பதுகூட கருத்திற்கொள்ளப்படாது அவர்களை இழிவுபடுத்தும் வகையில் வசைமாரி இருந்தது. இதேவேளை சபைக்கு வெளியில் கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டது. பிக்கு ஒருவர் தாக்கப்பட்டதோடு அவர் கடத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாயின. அத்தோடு இப் பிக்குகளின் விகாரைகள்-பன்சாலைகள் என்பன அமைந்திருந்த இடங்களில் கறுப்புக்கொடிகளும் தொங்கவிடப்பட்டன.

இந்நிலை நேற்றும் பாராளுமன்றம் கூடியபோது மேலும் மோசமடைந்தது. ஜாதிக ஹெல உறுமய பிக்குகள் பாராளுமன்றத்தில் வைத்துத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அளவிற்கு அவர்களின் காயம் பாரதூரமானதாக இருந்தது. இதேவேளை வேறுசில பாராளுமன்ற உறுப்பினர்களும் கைகலப்பில் ஈடுபட்டனர். அத்தோடு ஆளும் கட்சியினால் சபாநாயகரிடம் இருந்த செங்கோலும் பறித்தெடுக்கப்பட்டதோடு, அது ஒளித்தும் வைக்கப்பட்டது.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் கூச்சல் குழப்பம், வசைமாரி பொழிதல் என்பது கடந்த காலத்திலும் இடம்பெற்றுள்ளதாயினும் அண்மைக்காலத்தில் அது அடிக்கடி நிகழும் ஒன்றாக மாறியுள்ளது. மட்டுமல்ல, தீவிரம் மிக்கதாகவும், வன்முறைமிக்கதொன்றாகவும் மாற்றம் கண்டு வருகின்றது. அதாவது சனநாயகப் பண்புகள், மரபுகள் என்பனவற்றிற்கு இவை மாறானவை மட்டுமல்ல, மனித நாகரிகத்தினையும் இழிவுபடுத்துபவையாக உள்ளன.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் தற்பொழுது சனநாயகப் பாரம்பரியங்கள் இழிவுபடுத்தப்படும் வகையில் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றமைக்கு அதிகாரத்தில் உள்ளவர்கள் அதிகாரத்தினைத் துஷ்பிரயோகம் செய்துவருகின்றமையே காரணமாகும். வேறுவிதமாகக் கூறுவதானால்? சனநாயக மரபுகளுக்கும் பாரம்பரியங்களுக்கும் எதிராகப் பயன்படுத்துவதும் ஆட்சிஅதிகாரத்தை நிலைநிறுத்த அதிகாரத்தைப் பயன்படுத்த முற்படுவதுமே காரணமாகும்.

சனநாயகப் பாரம்பரியத்தின்படி பாராளுமன்றத்தில் அதிகப்படியான ஆசனங்களைக் கொண்டவர்கள் குறிப்பாக அறுதிப் பெரும்பான்மை கொண்டவர்கள் ஆட்சியாளர்களாக இருத்தல் வேண்டும். ஆனால் சிறிலங்கா பாராளுமன்றத்தில் அத்தகையதொரு நிலை தற்போது இல்லை. பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையைப் பெறமுடியாத சிறுபான்மையினரே ஆட்சி அதிகாரத்தில் உள்ளனர்.

இச்சிறுபான்மை அரசதரப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிப்பதவியை வைத்துக்கொண்டுள்ளமையால் பெரும்பான்மை ஆட்சியைக் கலைத்து சிறுபான்மை அரசாங்கத்தை உருவாக்கி ஆட்சி நடத்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். அதாவது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டுள்ளனர். இந்நடவடிக்கையானது முற்றிலுமாக சனநாயக விரோத நடவடிக்கையாகும். அரசியல் யாப்பிலுள்ள நடவடிக்கையைக்கொண்டு தமது அதிகார அபிலாசைகளை அவர்கள் நிறைவேற்றிக்கொள்ள முற்படுகின்றனர். அன்றி அதிகாரத்தைக்கொண்டு ஏனையவர்களை மிரட்டிப் பணியவைக்கப் பார்க்கின்றனர்.

இதன்விளைவுதான் சிறிலங்கா பாராளுமன்றத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள குழப்பமும், வன்முறையும், சனநாயக மரபுகள் பாரம்பரியங்களை இழிவுபடுத்தும் செயல்களும் ஆகும். சனநாயகத்திற்குப் பெரும்பாரம்பரியங்களும் மரபுகளும் இருக்கலாம். ஆனால் அவற்றைப் பாதுகாக்க வேண்டியவர்கள் அரசியலில் ஈடுபடும்போதும் அதிகாரத்திற்கு வரும்போதுமே அவற்றின் பெருமை பாதுகாக்கப்படமுடியும். அவ்வாறு இல்லாதுவிட்டால் அதிகாரத்தில் உள்ளவர்களின் மட்டத்திற்கு சனநாயகம் கொண்டுவரப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகவே இருக்கும்.

# பாராளுமன்றத் தாக்குதலுக்கு எதிராக கொழும்பில் ஹெல உறுமய ஆர்ப்பாட்டம்

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைகளை எதிர்த்து நேற்று விஹாரமகாதேவி பூங்காவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. ஜாதிக ஹெல உறுமய இதனை ஒழுங்கு செய்திருந்தது. இதேவேளை நேற்றைய பாராளுமன்ற வன்முறையின் போது பாதிக் கப்பட்டதாகக் கூறப்பட்ட கொலன் னாவ சுமங்கல தேரர் நேற்றுக் கொழும்பிலுள்ள தனியார் வைத்தி யசாலையில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். ஏற்கனவே இவரும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அக்மீமன தயாரட்ன தேரரும் ஜெயவர்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் நேற்று அவர்கள் இருவரும் தனியார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். (32)

# பாராளுமன்றில் சுமங்கல தேரர் என்னை தகாத வார்த்தைகளால் ஏசினார்

## -ஐ.ம.சு.மு.பா.உ.சபாநாயகரிடம் முறையீடு

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தமது சிறப்புரிமையைப் பாதிக்கும் வகையில் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ சுமங்கல தகாத வார்த்தைகளால் ஏசியதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகே சபா நாயகரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

நேற்று மாலை இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை தம்மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய நேற்று ஆளும் கட்சியின் 06பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது முறைப்பாட்டை செய்துள்ளது. இதன் காரணமாக தமது பாராளுமன்ற சிறப்புரிமை பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# அரச தனியார் ஊடகங்கள் கட்டுக்கோப்புடன் நடக்கவேண்டும்

## -சிறில.சபாநாயகர் லொக்குபண்டார

ஓர் சம்பவத்தை மக்களுக்கு அறிவிக்கின்ற அரச, தனியார் ஊடகங்கள் கட்டுக்கோப்பையும, ஒழுக்க நெறிகளையும் கடைப்பிடிக்க வேண்டுமென சபாநாயகர் லொக்குபண்டார நேற்று தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பெரும் அமளிதுமளியை அவர் கடுமையாக விமர்சித்துள்ளார். செங்கோல் இல்லாமல் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களுக்கு சட்ட அந்தஸ்து உள்ளதா? என வினாவிய வேளை செங்கோல் என்பது காலனி ஆதிக்கத்தின் சின்னம் என்பதால் அதில் எந்தப் பெறுமதியும் இல்லையென கூறியுள்ளார்.

# அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயலால் மலையக மக்கள் பிரச்சினை வெளிவரவில்லை

## ம.ம.மு. தலைவர் சந்திரசேகரம்

(கொழும்பு)

அரசாங்கம், பாராளுமன்றத்தில் எதிர்கட்சியைப் போன்று செயற்பட்டு கொண்டிருப்பதால் மலையக மக்கள் தொடர்பான பிரச்சினைகளை உரிய வகையில் நாட்டு மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல முடியவில்லை என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கந்தப்பளை வன்முறை தொடர்பாக நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் விவாதம் இடம் பெறவிருந்தது. அதில் புளத்சிங்கள விடயமும் எடுத்துக் கொள்ளப்படவிருந்தது. இந்த நிலையில் அரசாங்கக் கட்சியின் பொறுப்பற்ற செயலால் அந்த விவாதம் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. எனவும் அரசாங்கம் வேண்மென்றே இந்த விவாதத்தைத் தள்ளி வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகவும் பி.சந்திரசேகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார். (32)

# கல்கிசையில் துப்பாக்கிகளுடன் நால்வர் பொலிசாரால் கைது

கல்கிசைப்பகுதியில் கோட்டல் ஒன்றில் இருந்த நான்கு பேரை பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து இரண்டு துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கிகளில் ஒன்று அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவிலிருந்து காணாமல் போயிருந்ததாக திட்டமிட்ட கொலைகள் தடுப்புப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் அல்விஸ் விஜயரத்ன தெரிவித்தார். கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் பல கொலை, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களென்று அவர் மேலும் தெரிவித்தார். மொறட்டுவப் பகுதியிலுள்ள பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவரின் கொலையுடன் இவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது. அத்துடன் அவர்களிடமிருந்த துப்பாக்கி ஐந்து வருடங்களுக்கு முன்பு பாதுகாப்புப் பிரிவிலிருந்து திருடப்பட்டிருந்தது என்றும் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# அமைப்பாளராக றெயினோல்ட் கூரே

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் தகவல் தொடர்பு மற்றும் ஊடக அமைச்சர் றெஜினோல்ட் கூரே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளராக சனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்ற மாதம் 27ஆம் திகதி தொடக்கம் இவர் இந்நியமனத்தைப் பெற்றுள்ளதாக கொழும்பில் வெளியாகும் ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# ஆறுமுகம் தொண்டமானுக்கு பாதுகாப்புக் குறைப்பு


(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை சிறிலங்கா அரசாங்கம் குறைத்துள்ளது.

இவரது பாதுகாப்பிற்காக இரண்டு பொலிஸ்காரர்கள் மட்டுமே அமர்த்தப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்துடன் இ.தொ.க. இணைந்து கொள்ளாததை அடுத்தே இந்தத் திடீர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

உலகச் சூழல் தினம் - யூன் 05




எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சமுத்திரத் தரைப்பரப்பில் 0.5 வீதத்துக்கும் குறைவான இடத்தையே முருகைக்கற்பாறைகள் எடுத்திருந்தாலும், கடல் வாழ் உயிரினங்களில் 90 வீதத்துக்கும் அதிகமான இனங்கள் இந்தப் பாறைகளிலேயே தங்கியுள்ளன.

# தமிழ்மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியும் அரசாங்கம் அதற்கு மதிப்பளிக்கவில்லை

## –யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த சிறிலங்கா பாராளுமன்றத் தேர்தலின்ஊடாக தமிழ் மக்கள் தமது மனஉணர்வுகளையும், அபிலாசைகளையும் வெளிப்படுத்திய பின்னரும் கூட சிறிலங்கா அரசாங்கம் அதற்கு மதிப்பளிக்காத தன்மை காணப்படுகிறது. இதனால் தமிழ் மக்கள் வெகுசன போராட்டங்கள் ஊடாக தமது வாழ்வுரிமைகளை வலியுறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு நேற்று மாலை 5.00 மணியளவில் யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்ற யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளினுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர். இளம் பரிதி தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தரப்பினரது மன உணர்வுகளுக்கும் அபிலாசைகளுக்கும் மதிப்பளித்து அவர்களுக்கு இயல்பு வாழ்வினை ஏற்படுத்திக் கொடுக்க சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை. மாறாக அரசின் அண்மைக்கால செயற்பாடுகள் தமிழர்களது அமைதிவாழ்விற்கு சாவு மணி அடிப்பது போல இருக்கிறது. இதனால் யாழ். குடாநாட்டு மக்கள் தமக்குரிய இயல்பு வாழ்வை வலியுறுத்தி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளனர். எனவே விடுதலைப்புலிகளும் மக்களும் இம் முயற்சிகளுக்கு தமது ஆதரவை வழங்குவர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.சிறில் தலைமையில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர். கலைவிழி, துணைப் பொறுப்பாளர் செம்மணன், போக்குவரத்து பிரிவுப் பொறுப்பாளர் பாலையா ஆகியோர் உட்பட போராளிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள் என சுமார் 500 வரையிலானோர் கலந்து கொண்டனர். (33)

# உதைபந்தாட்டப் போட்டிக்கு சென்ற சிறுவனைக் காணவில்லை

## –யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளவென வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற சிறுவன் ஒருவன் காணாமல் போயிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அராலி கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் கிருபாகரன்(வயது 15) எனும் சிறுவனே கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (27)

# வன்னிமாவட்டத் தேர்தல் குறித்த புளொட்டின் மனு தள்ளுபடி

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நீதியற்ற வாக்களிப்பு நடைபெற்றதாகக்கூறி வன்னி மாவட்ட வேட்பாளர் ஒருவரால் கொண்டு வரப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

சனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட கந்தையா சிவனேசன் என்பவரே மேற்படி மனுவைச் செய்திருந்தார். தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, வவுனியா அரச அதிபர் கே.கணேஸ், பொலிஸ்மா அதிபர், இராணுவ தளபதி ஆகியோருடன் மேலும் நால்வர் பிரதி வாதிகளாக மனுதாரரால் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

# நடேசன் கொலையில் சம்பந்தபட்டோரை சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டும்

## - கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்து

ஊடகவியலாளர் ஜி.நடேசனின் படுகொலையைக் கண்டித்து நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

கோட்டை ரயில்வே முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்மை குறிப்பிடத்தக்கது. பி.ப.12.45 மணியிலிருந்து 1.30 மணிவரை நடைபெற்றது.இவ் ஆர்ப்பாட்டத்தைக் இலங்கை சுதந்திர ஊடக அமைப்பும், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் ஏனைய ஊடக அமைப்புக்களும் ஒழுங்கு செய்திருந்தனர். இலங்கை யில் சுதந்திர ஊடக துறைக்கான சூழ்நிலையை உருவாக்கித்தர வேண்டும் எனவும், நடேசனின் கொலையில் சம்பந்தப்பட்டோரை சட்டத்தின் முன்னால் நிறுத்தவேண்டும் எனவும் இதில் பங்கேற்றோர் அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன் வைத்தனர். (32)

# உலர் உணவு நிவாரணம் பெறுவோரின் தொகையைக் குறைக்கும் நடவடிக்கை இல்லை

## யாழ். அரசசெயலக வட்டாரங்கள் தெரிவிப்பு

(வடமராட்சி)

யாழ்குடா நாட்டில் உலர் உணவு நிவாரணம் பெறுபவர்களின் தொகையினைக் குறைக்கும் வகையிலான எந்தவொரு செயற்பாடும் தற்போது யாழ். செயலகத்தால் முன்னெடுக்கப்பட வில்லையென செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொது அமைப்புகளது ஒன்றியம் இந் நிவாரண வெட்டிற்கு எதிர்ப்புத்தெரிவித்திருந்த நிலையில், செயலக வட்டாரங்கள் இத்த கவலை வெளியிட்டுள்ளன.

செயலகம் வழமை போன்று பெப்ரவரி மாதத்திற்கான உலர் உணவு நிவாரணத்தை வழங்குவதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதாகவும், நிவாரண வெட்டு பேச்சளவில் மட்டுமே தற்போது உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (27)

### நேர்முகப் பரீட்சை

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் விண்ணப்பித்துள்ள பட்டதாரிகளுக்கான மேற்படி நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 11.06.2004 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்பதனை பிரதேசசெயலாளர் அறியத்தருகின்றார்.

# வாழைச்சேனையில் 3 இளைஞர்கள் சிறிலங்காப் பொலிசாரால் கைது

வாழைச்சேனையில் கைத்துப்பாக்கி மற்றும் கைக்குண்டு உட்பட ஆயுதங்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்களை நேற்று முன்தினம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கல்குடா விநாயகபுர வீதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக கல்குடா பொலிசார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கல்குடா வீதியால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை மறித்துச் சோதனையிட்டவேளை, அதில் பயணித்த இரண்டு இளைஞர்களிடமிருந்து எம். எம். நவீன ரக கைத்துப்பாக்கி ஒன்றும், கைக்குண்டு ஒன்றும் மற்றும் அதற்கான ரவைகள், கையடக்கத் தொலைபேசி என்பனவற்றைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இதனைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் ரி.56 ரக துப்பாக்கி ரவை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### வசதிகளின்றி தபாலகம்

யாழ்.சுன்னாகம் தபாலகம் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது. அந்தவகையில் சொந்தக் கட்டடம் அற்றநிலையில் நீண்ட காலமாக சுன்னாகம் கதிரமலை சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வரும் மேற் படி தபாலகத் திற்கு உரிய தளபாட வசதிகள், இடவசதிகள் உபகரண வசதிகள் என்பன பற்றாக் குறை யாகவே காணப்படுகின்றது.(33)

# காயமடைந்த ஹெலஉறுமய பா.உ.களுக்கு தமிழரசுப் பா.உ.கள் ஆறுதல் கூறினர்

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற அமளிதுமளியில் அரசாங்கத் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் தாக்குதலில் காயமடைந்த இரு ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்களான பௌத்த துறவிகளை தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், சிவாஜிலிங்கம் ஆகியோர் இவர்களைப் பார்வையிட்டுள்ளனர்.

ஜாதிகஹெல உறுமய தமிழ் மக்களுக்கு எதிரான அமைப்பாக இருந்த போதிலும் தமிழ் மக்களின் மனிதாபிமான உணர்வைக் காண்பிக்கும் வகையில் தாம் அவர்களைப் பார்வையிடச் சென்றதாக கூட்டமைப்புப் பா.உ.கள் தெரிவித்துள்ளனர்.

# மிதிவெடி அபாயம் காரணமாக கொல்களம் நிறுவும் பணி தடை

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி அபாயம் காரணமாக வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்படவிருந்த கொல்களம் ஒன்றை நிறுவும்பணி கைவிடப்பட்டுள்ளன. மேற்படி பிரதேசத்தின் சுகாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு விலங்குகளை இறைச்சிக்காக வெட்டுவதற்கான கொல்களம் ஒன்றை மாதகல் பகுதியில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

எனினும் இவ்வாறு கொல்களத்தை நிறுவுவதற்காகத் தெரிவான காணியினுள் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளின் அபாயத்தினால் இக்கொல்களத்தை அமைக்கும் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதியில் ஒதுக்குப்புறமான இடங்களில் வைத்து இவ்வாறு உணவிற்காக ஆடுமாடுகள் வெட்டப்படுவதனால் சுகாதாரசீர் கேடுகள் ஏற்படுவதுடன் துர்நாற்றமும் வீசுகிறது. (33)

### நடேசன்...

வங்கிகளிலும் ஊழியர்கள் மிகக் குறைவாக சென்றனர். தனியார் பஸ்கள் சேவையில்ஈடுபட்டன என்றாலும் பயணிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்பட்டது.(25)

### தமிழ்க்....

இடைக்கால தன்னாட்சி திட்ட வரைவு பற்றும் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் விளக்கிக் கூறவுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### நாளை....

கட்டுள்ளது. இதேவேளை மேற்படி கண்டனப் பேரணி ஏற்கனவே திட்டமிட்டபடி நல்லூர் ஆலய முன்றலில் இருந்து புறப்பட்டு யாழ் செயலகத்தில் முடிவடையுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

### புதுக்குளம்...

இதன் பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் கருத்துத் தெரிவிக்கையில்;

அரசியல் வேலைத் திட்டங்களுக்காக வந்துள்ள போராளிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும், இது போன்று இனி எந்த சம்பவமும் இடம்பெறக் கூடாதெனவும் கோரிக்கை விடுத்தார். (21)

### விடுதலைப்...

தின் குறைந்த பட்ச பொது நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமையை ஆதரித்துள்ள திருமாவளவன் அந்தத் திட்டம் இலங்கைத் தமிழர் விவகாரத்திலும் உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார். (32)

### சிறிலங்கா...

சுமார் மூவாயிரம் அடி உயரத்தில பறந்து கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் போது இவ்விமானம் 03 பகுதிகளாக உடைந்துள்ளமை தெரியவந்துள்ளது. விமானத்தின் கறுப்புப்பெட்டி கண்டெடுக்கப்பட்டு விமானப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விமான விபத்து தொடர்பான விசாரணைகளைத் தொடர்வதற்காக விமானப்படைத்தளபதி குழுவொன்றை நேற்றே நியமித்துள்ளார்.

இந்தக் குழுவிற்கு குரூப் கப்டன் ஜி.கே. புளேசிங் கா தலைமை வகிக்கின்றார்.

இந்த விமானம் உக்ரேன் நாட்டின தயாரிப்பு என விமானப்படை அதிகாரி கூறியுள்ளார். இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### சந்திப்பு....

இச்சந்திப்பு பெரிதும் பயனற்றது என்பதனால் இந்த முடிவுக்கு வந்துள்ளனர். (32)

### பயங்கரவாத....

தலைவர் இரா.சம்பந்தன் அவர்களும், ஜாதிக ஹெலஉறுமய தலைவர்கள் உரையாற்றியபோதும் அவர்களை தொடர்ந்து உரையாற்ற விடாது தடுத்துள்ளமை.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம் அவர்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டமை போன்ற நடவடிக்கைகளினால் மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலமாக பாராளுமன்றத்தின் கௌரவத்திற்கு மாபெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தநிலையில் ஆளும் கட்சியின் உச்சசெயற்பாடு கடந்த பாராளுமன்ற அமர்வின் போது ஜாதிகஹெலஉறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ சுமங்கல தேரர், அக்மீமன தயாரட்ன தேரர் ஆகிய இருவரும் சபாநயாகரின் அழைப்பின் பெயரில் சத்தியப்பரமாணம் எடுக்க வந்த போது அரச பாராளுமன்ற குழு அங்கத்தவர்கள் காட்டுமிராண்டித் தனமான முறையில் தாக்கினர். இது ஒரு குற்றவியல் நடவடிக்கை யாகும். இது மட்டுமன்றி பாராளுமன்றத்தில் தொலைக்காட்சி படப்பிடிப்புக் கருவி மூலம் படப்பிடிப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களின் இத்தகைய செயற்பாட்டால் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை பாராளுமன்றத்தில் சனநாயக ரீதியாக எம்மால் வெளிப்படுத்த முடியாமல் இருக் கிறது. பாராளுமன்றத்தில் விவாதங்களை நடத்த முடியாதவாறு பயங்கரவாதம் பாராளுமன்றத்தில் உருவாக கப்பட்டுள்ளது இவற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

118 நாடாளுமன்ற உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு இந்தக் கையொப்ப திரட்டல் இடம் பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மற்றும் தமிழரசு கட்சி, மேல்மாகாண மக்கள் முன்னணி என்பன இதில் கையொப்பமிடத் தீர்மானித்துள்ளன. இந்த கையொப்பங்களுடன் கூடிய பாராளுமன்றத்தில் சனநாயக நடைமுறை செயற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எதிர்க்கட்சிகள் சனாதிபதியிடமும் சபாநாயகரிடமும் இன்று முற்பகல் கையளிக்கவுள்ளன. இவ்விடயத்தில் மட்டும் தாம் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளதாக தமிழரசுக்கட்சியினர் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.